13th
MAY
2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 108 | பக்கங்கள் - 19 | editor.uthayam@gmail.com

## தீவிரமடையும் டெங்கு; 42 அபாய வலயங்கள்

இலங்கையில் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ள நிலையில், நாடு முழுவதும் 42 அதி-அபாய வலயங்களை சுகாதார அமைச்சு அடையாளம் கண்டுள்ளது. 02ம் பக்கம்பார்க்க...

## கபில சந்திரசேனவின் திடுக்கிடும் தகவல்கள் குறித்து முழுமையான விசாரணை நடாத்தப்பட வேண்டும்!

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வேண்டுகோள்!

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் முன்னாள் 02ம் பக்கம்பார்க்க...

## நாடெங்கும் பலத்த மழை

நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

நாட்டில் நிலவி வரும் கடும் மழை 02ம் பக்கம்பார்க்க...

# அனைவரும் சட்டத்துக்குக் கட்டுப்படும் புது தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

### மாத்தளை கூட்டத்தில் ஜனாதிபதி கருத்து



சட்டம் அனைவருக்கும் பொதுவானது.எவருக்கும் விதிவிலக்கு கிடையாது என ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழக் கூட்டத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட அரச அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு கருத்துத் தெரிவித்த அவர் அரச அதிகாரிகள் ஊழியர்கள் எவருக்கும் 03ம் பக்கம்பார்க்க...

## சென்னை முஸ்லிம் லீக் தலைமையகத்தில் முதலமைச்சர் விஜய்க்கு சிறப்பான வரவேற்பு



செய்தி 05ம் பக்கத்தில்....

## பிரதமரினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட மஹபொல பழைய மாணவர் இணையத்தளம்

(எம்.எச்.எம். சியாஜ்)

என்னிடமிருந்து மஹபொலவிற்கு, மஹபொலவிலிருந்து பிள்ளைகளுக்கு மஹபொல பழைய மாணவர்கள் இணையத் தளத்தினை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (மே 02ம் பக்கம்பார்க்க...



## மகிழ்ச்சிக்குப் பதிலாக துயரத்தை விதைக்கும் மக்கள் விரோத ஆட்சியே இன்று



அரசின் மீது சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

மக்களுக்கு விரோதமான, மக்களின் துன்பத்தை புரிந்து கொள்ளாத, மக்களை பழிவாங்கும் அரசாங்கமே இன்று நாட்டில் காணப்படுகின்றது.

மகிழ்ச்சிக்குப் பதிலாக துயரத்தை விதைக்கும் 03ம் பக்கம்பார்க்க...

## ஜித்தா துணைத் தூதுவராக லபர் தாஹிர் பதவியேற்பு



(எம்.எப்.எம். நியாஸ்)

சவுதி அரேபியாவின் ஜித்தாவில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான கவுன்சில் ஜெனரல் ஓய்வுநிலை 02ம் பக்கம்பார்க்க...

## தமிழ், முஸ்லிம்கள் ஒற்றுமைப்படுவதன் மூலமே எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்



மக்கள் சந்திப்பில் ஹிஸ்புல்லா எம்.பீ.

தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். எங்களுக்கிடையில் எந்தவொரு பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றை கலந்துரையாடலின் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும். நாம் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலமே எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் அதுவே எமது வெற்றியாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் 03ம் பக்கம்பார்க்க...

## பொருளாதார தொலைநோக்குப் பார்வை இல்லை; அரசாங்கம் தோல்வியடைந்தது விட்டது

நான் ஒருபோதும் இணைய மாட்டேன் ஹர்ஷ டி .சில்வா எம்.பி.

அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்பும் நோக்குடனேயே தான் அரசியலுக்கு வந்ததாகவும், தற்போது நிலவும் 02ம் பக்கம்பார்க்க...

## இரண்டரை மணி நேர விசாரணையின் பின் ஆணைக்குழுவிலிருந்து வெளியேறிய மஹிந்த

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக வாக்குமூலம் பதிவு செய்த பின்னர், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்த 03ம் பக்கம்பார்க்க...



அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## நாடெங்கும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 16 பிரதான நீர்த்தேக்கங்களும் 17 நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களும் தற்போது வான்பாய்ந்து வருவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்று (13) காலை 6.00 மணி நிலவரப்படி இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பணிப்பாளர் பொறியியலாளர் எச்.எம்.பி.எஸ்.டி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

தற்போது வான்பாய்ந்து வரும் முக்கிய நீர்த்தேக்கங்களின் விபரங்கள் மாவட்ட ரீதியாக வருமாறு:

அனுராதபுரம்: இராஜாங்கனை நீர்த்தேக்கம்.

பதுளை: அபேவெல நீர்த்தேக்கம்.

அம்பாந்தோட்டை: மௌஆற, லுணுகம்வெஹெர, திஸ்ஸவாவி, வீரவில யோத வாவி மற்றும் வெஹெரகல நீர்த்தேக்கங்கள்.

குருநாகல்: அம்பகொல வாவி, உஸ்கல சியம்பலன்கமுவ, மாகல்ல மற்றும் தெதுரு ஓயா நீர்த்தேக்கங்கள்.

கண்டி: நாலந்த மற்றும் வேமெடில்ல நீர்த்தேக்கங்கள்.

மொனராகலை: அலிகொட்டஆற நீர்த்தேக்கம்.

மன்னார்: யோத வாவி.

அதிகப்படியான நீர் வரத்து காரணமாகப் பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன:

இராஜாங்கனை நீர்த்தேக்கம்: 12 வான் கதவுகள் திறக்கப்பட்டு, வினாடிக்கு 14,000 கன அடிக்கும் அதிகமான நீர் கலா ஓயாவிற்கு திறந்துவிடப்படுகிறது.

லுணுகம்வெஹெர நீர்த்தேக்கம்: 6 வான் கதவுகள் திறக்கப்பட்டு, வினாடிக்கு 4,100 கன அடிக்கும் அதிகமான நீர் கிரிந்தி ஓயாவிற்கு விடுவிக்கப்படுகிறது.

வெஹெரகல நீர்த்தேக்கம்: 6 வான் கதவுகள் திறக்கப்பட்டு, வினாடிக்கு 2,400 கன அடிக்கும் அதிகமான நீர் மாணிக்க கங்கைக்குள் வெளியேற்றப்படுகிறது.

பொதுமக்களுக்கு எச்சரிக்கை

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்து வருவதாலும், ஆறுகளுக்கு நீர் திறந்துவிடப்படுவதாலும் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களும், ஆறுகளை அண்டிய பகுதிகளில் வசிப்போரும் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## தீவிரமடையும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேன தனது மரணத்திற்கு முன்னர் வழங்கிய சத்தியக்கடதாசியில் (Affidavit) குறிப்பிடப்பட்டுள்ள திடுக்கிடும் தகவல்கள் குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சி ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஏர்பஸ் விமான குத்தகை விவகாரத்தில், லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் குறிப்பிட்ட ஒரு அதிகாரி, தன்னை இருவரின் பெயர்களைக் குறிப்பிடுமாறு கட்டாயப்படுத்தியதாக கபில சந்திரசேன தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கபில சந்திரசேனவின் சத்தியக் கடதாசி குறித்து விசாரணை நடத்த வேண்டும். அரசியல் உள்நோக்கத்திற்காக அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காக சாட்சியங்களை இட்டுக்கட்டும் செயல்களில் அதிகாரிகள் ஈடுபடக்கூடாது என ஜி.எல். பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

வழக்கு விசாரணைகள் அனைத்தும் வெளிப்படையான முறையில் நடத்தப்பட வேண்டும். ஆதாரங்களை உருவாக்குவதிலோ அல்லது சாட்சியங்களை திசைதிருப்புவதிலோ யாரும் ஈடுபட முடியாது.

சந்திரசேனவின் சத்தியக்கடதாசியில் உள்ள உண்மைகளை கண்டறிய ஒரு சுதந்திரமான விசாரணை அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தீவிரமடையும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் தரவுகளின்படி, இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 27,465 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், 14 மரணங்களும் சம்பவித்துள்ளன.

தற்போதைய தரவுகளின் அடிப்படையில், மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். குறிப்பாக கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் பாதிப்பு அதிகமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த பதில் பணிப்பாளர் வைத்தியர் கபில கண்ணங்கர, நாட்டில் தற்போது நிலவும் தொடர்ச்சியான மழைக்கால வானிலை காரணமாக டெங்கு பரவல் மேலும் அதிகரிக்கக்கூடும் என எச்சரித்துள்ளார்.

## பிரதமரினால்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

12ஆம் திகதி) இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பிரதமரும் கல்வி உயர்கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய கலந்து கொண்டார்.

மஹபொல புலமைப்பரிசில் மூலம் பயன்பெற்ற பழைய மாணவர்களையும், தற்போது பயன்பெற்று வரும் மாணவர்களையும் ஒரே வலையமைப்பிற்குள் கொண்டுவரும் நோக்கில் உருவாக்கப்பட்ட "என்னிடமிருந்து மஹபொலவிற்கு, மஹபொலவிலிருந்து பிள்ளைகளுக்கு" - மஹபொல பழைய மாணவர்கள் இணையத் தளத்தினை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்த பிரதமர் அங்கு தனதுரையில்:

மஹபொல பழைய மாணவர் வலையமைப்பின் ஊடாக, மஹபொல நிதியமானது வெறும் நிதி உதவியுடன் மாத்திரம் நின்றுவிடாது, அதற்கு அப்பால் சென்று, அதன் மூலம் உதவிபெறும் மாணவர்களின் ஏனைய தேவைகளுக்கும் ஒரு பக்கபலமாக அமையும் வகையில் அதனைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்.

உங்களுக்குக் கிடைத்த இந்தப் புலமைப்பரிசிலை உங்களுக்கு மாத்திரம் கிடைத்த ஒன்றாகக் கருத வேண்டாம்.

இதன் ஊடாக உங்களது உயர்கல்விக்கான பிரவேசத்தை உறுதிப்படுத்துவதன் மூலம், உங்களிடமிருந்து நாட்டிற்கு ஒரு சேவை கிடைப்பதையே நாம் எதிர்பார்க்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

## பொருளாதார..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதந்திகளுக்கு மத்தியில் அரசாங்கத்துடன் இணையப் போவதில்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சமகி ஜன பலவேகய (ஐதுஐ) பாராளுமன்ற உறுப்பினர் விடுத்துள்ள நீண்ட அறிக்கையில், தனது குடும்ப உறுப்பினர்கள் எவரும் அரசியலில் ஈடுபடவில்லை என்றும், இலங்கையை ஒரு வளர்ந்த நாடாகப் பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தினாலேயே தான் பொதுவாழ்வில் நுழையத் தீர்மானித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குறுகிய அரசியல் நலன்களுக்காக தான் அரசியல் முடிவுகளை எடுப்பதில்லை எனத் தெரிவித்த அவர், எதிர்க்கட்சி முகாமில் இருந்து விலகத் தயாராகி வருவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளையும் நிராகரித்துள்ளார்.

சில குழுக்கள் தன்னை "வலதுசாரி முகாமில்" (சஜபாவ-றலைப உயுஜி) இருந்து வெளியேற்ற முயற்சிப்பதாகத் தோன்றுவதாகவும், ஆனால் அது "ஒருபோதும் நடக்காது" என்றும் அவர் வலியுறுத்தினார். மேலும், ஒரு நாள் அந்த முகாமிற்கு தலைமைத்துவத்தை வழங்குவதை நோக்கியே தனது அரசியல் பயணம் தொடரும் என்றும் அவர் கூறினார்.

அரசாங்கத்தின் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்த அவர், அரசாங்கம் "தோல்வியடைந்துவிட்டது" என்றும், எதிர்காலத்தை நோக்கிய பொருளாதாரத் தொலைநோக்குப் பார்வை அதற்கு இல்லை என்றும் குற்றம் சாட்டினார்.

உலகிற்குத் திறக்கப்படாத "மூடிய மற்றும் குறுகிய கருத்துக்களால்" நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது என்றும், இது எதிர்காலத்தில் தெளிவாகத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

அரசாங்கத்தில் இணைவது குறித்து தான் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்று மறுத்த ஹர்ஷ டி சில்வா, இவ்வாறான வதந்திகள் மூலம் ஐதுஐ கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்த சில குழுக்கள் முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டினார்.

பொருளாதார ரீதியில் செழிப்பான இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு எதிரான தனது அரசியல் போராட்டத்தை தீவிரப்படுத்தப் போவதாக அவர் கூறினார். அதேவேளை, அனைத்தையும் எதிர்ப்பதற்குப் பதிலாக, நல்ல முடிவுகளை ஆதரிக்கும் ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டிற்காகத் தேவைப்படும் போது எந்தவொரு பெரிய பொறுப்பையும் ஏற்கத் தயாராக இருப்பதாகவும், "இலங்கைக்கு ஒரு புதிய யுகம் தேவை" என்றும் அவர் வலியுறுத்தினார்.

## ஜித்தா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர் எம். ரி. மொஹமட் லஃபார் தாஹிர் நேற்று திங்கட்கிழமை ஜ11ஸ தமது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

நீதியரசர் லஃபார் தாஹிர் நீதித்துறை சேவையில் 35 ஆண்டுகளுக்கும் மேலான சேவை அனுபவத்தைக் கொண்டவர். பல்வேறு பதவிகளில் பணியாற்றிய அவர், அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக பணியாற்றினார். நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும், இலங்கை சட்டக் கல்லூரியின் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

நீதித்துறையில் காலதாமதங்களை குறைப்பதற்காக தனது நடவடிக்கைகளால் 2007 ஆம் ஆண்டில் ஒரே நாளில் 120 வழக்குகளுக்கான தீர்ப்புகளை வழங்கி நீதித்துறை நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு கால்கோளாக அமைந்தார் .

கவுன்சில் ஜெனரல் லஃபார் தாஹிர் கொழும்பு விவேகானந்தா தேசிய பாடசாலை மற்றும் மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலையின் பழைய மாணவராவார். இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தையும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி பட்டத்தையும் பெற்றவராவார்.

இக்கடமைப்பு நிகழ்வில் கவுன்சிலர் ஜெனரல் லாபர் தாஹிர் உரையாற்றுகையில்,

"ஜித்தா மற்றும் சவுதி அரேபியாவின் மேற்கு பிராந்தியத்தில் வசிக்கும் இலங்கை பிரஜைகளுக்கு தூ தரகம் திறமையான மற்றும் பயனுள்ள தொழில் நல சேவையை வழங்குவதுடன், இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை மேம்படுத்த தூதரகத்தின் புதுப்பிக்கப்பட்ட முயற்சிகள் துணை புரியும்" என



# கஹட்டோவிட்ட அல்-பத்ரியா மகா வித்தியாலயம் வரலாற்றுச் சாதனை!

கம்பஹா கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் கஹட்டோவிட்ட அல்-பத்ரியா மகா வித்தியாலயம் 2025ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பாரிய வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது.

வலயத்திலுள்ள உயர்தர வகுப்புக்களைக் கொண்ட 45 தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளுக்கிடையில் அல்-பத்ரியா மகா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்று கிராமத்திற்கும் கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளது.

பாடசாலையின் முக்கிய சாதனைகள்:

இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 90 சதவீதமானோர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதியினைப் பெற்றுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும். அத்துடன், சுமார் 35 வருடங்களுக்குப் பின்னர்



வர்த்தகப் பிரிவில் இப்பாடசாலை ஒரு மகத்தான வரலாற்றுப் பெறுபேற்றைப் பதிவு செய்துள்ளது.

ஊர் மக்களின் வாழ்த்துக்கள்:

இந்தக் கல்விச் சாதனையைத் தொடர்ந்து கஹட்டோவிட்ட ஊர் மக்கள் தமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் பாடசாலைச் சமூகத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையின் இந்த வெற்றிக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அதிபர், பிரதி மற்றும் உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் உயர் வகுப்பு மாணவர்கள் ஆகியோருக்குப் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

மேலும், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பழைய மாணவியர் சங்கம் மற்றும் பத்ரியா நலன்புரிச் சங்கம் ஆகிய அமைப்புகளின் கூட்டு முயற்சியும் குறிப்பிடத்தக்கது.

## மகிழ்ச்சிக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் விரோத ஆட்சியே இன்று காணப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின்போது மின்சார கட்டணத்தை 33% ஆல் குறைப்போம் என்றும், ரூ. 9,000 கட்டணத்தை ரூ. 6,000 ஆகவும், ரூ. 3,000 கட்டணத்தை ரூ. 2,000 ஆகவும் குறைப்போம் என்றும் வீர வசனம் பேசிவிட்டு, தற்சமயம் பல கட்டங்களில் இந்த மின்சாரக் கட்டணங்களை அதிகரித்துள்ளனர். இதனால் உயர் மத்தியதர வர்க்கம், தொழில்முனைவோர், தொழிலதிபர்கள், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் என சமூகத்தில் பல தரப்பினரும் ஆபத்துக்கு ஆளாகி காணப்படுகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

SMART சமூக ஊடக செயற்பாட்டாளர்களுடன் நேற்று (12) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

- இந்த அரசாங்கம் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரையும் மறந்துவிட்டது.

மின்சாரக் கட்டண அதிகரிப்புகளால் உயர் மத்தியதர வர்க்கம், கைத்தொழிற்றுறையினர், தொழில்முனைவோர், மற்றும் நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களின் உற்பத்திச் செலவுகள் வேகமாக அதிகரித்து காணப்படுகின்றன. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% ஆன பங்களிப்பைப் பெற்றுத் தரும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டிற்கு வருவதற்கு முன் குறித்த நாட்டில் காணப்படும் மின்சாரக் கட்டணங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றனர். இவ்வாறு மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படுவதனால் இலங்கையை தமது முதலீட்டு தளமாக கருதி இதுவரை செயற்பட்டு வந்த வெளிநாட்டு முதலீட்டாளர்களும் மனமுடைந்து போகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## இரண்டரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை ஆணைக்குழுவிலிருந்து (CIABOC) வெளியேறியுள்ளார்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஏர்பஸ் ஒப்பந்தம் தொடர்பான குற்றச்சாட்டு குறித்து அறிக்கை அளிப்பதற்காக, மகிந்த ராஜபக்ச நேற்று காலை (12) CIABOC முன்னிலையானார்.

2013ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்காக விமானங்களைக் கொள்முதல் செய்தது தொடர்பாகக் கூறப்படும் 2 மில்லியன் அமெரிக்க டொலர் இலஞ்சம் குறித்து வாக்குமூலம் கோரி, இலஞ்ச ஆணைக்குழு விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

நேற்று (12) காரமுனை முகைதீன் ஜூம்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அதிகாரிகள் இன ரீதியிலான முரண்பாடுகளை தவிர்த்து, இப்பிரதேச மக்கள் தங்களுடைய அதிகாரப் பொறுப்பிற்குட்பட்டவர்கள் என்ற அடிப்படையில் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும். அதேபோன்று மக்களும் உரிய மற்றும் நியாயமான முறையில் அதிகாரிகளை அணுகி தங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும். அதுவே பிரச்சினைகளுக்கான நிலையான தீர்வை பெற்றுத்தரும்.

அதிகாரிகளுடன் முரண்பட்டு எமது பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று அரசியல் தலைமைகளும் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன ரீதியான முரண்பாடுகளை உருவாக்கி எந்த பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்" என தெரிவித்தார்.

## அனைவரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயப்படாது தமது பணிகளை நேர்மையாகவும் திறமையாகவும் மேற்கொள்ள வேண்டும்.

அதற்கு அவர்களுக்கு பூரண உரிமை உண்டு எனவும் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது.

"டிட்வா" சூறாவளி நிவாரணத்திற்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ள 500 பில்லியன் ரூபா நிதியை, பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தையும் அப்பிரதேசங்களையும் மேம்படுத்துவதற்காகப் பயனுள்ள முறையிலும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவது அரசியல் அதிகாரத்தினதும் அரச அதிகாரிகளினதும் பொறுப்பாகும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இவ்வருட இறுதிக்குள் அந்த அனைத்துத் திட்டங்களையும் நிறைவு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அதிகாரம், செல்வம் மற்றும் அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாத கலாசாரத்தை மாற்றி, அனைவரும் சட்டத்திற்குக் கட்டுப்படும் புதிய கலாசாரத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் தற்போது எடுத்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைவரும் சட்டத்திற்குக் கட்டுப்படும் ஒரு நாட்டை உருவாக்குவதை பெரும் அச்சுறுத்தலாகச் சித்தரிக்கச் சிலர் முயற்சிப்பதாகவும், ஒரு நாகரீகமான நாட்டை உருவாக்குவதற்காக அனைவரும் சட்டத்திற்குக் கட்டுப்படும் சமூகத்தை உருவாக்க வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

மாத்தளை வீர கெப்பெட்டிபொல மண்டபத்தில் நேற்று (12) முற்பகல் நடைபெற்ற மாத்தளை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சட்டமானது அரச அதிகாரிகள் தமது கடமைகளைச் சரியாகச் செய்வதற்கு எவ்விதத்திலும் தடையாக இருக்காது என வலியுறுத்திய ஜனாதிபதி, சட்டக் கட்டமைப்பிற்குள் நின்றுகொண்டு அரசாங்கத்தின் நிதியை மிகவும் திட்டமிட்ட முறையிலும் பயனுள்ள முறையிலும் பயன்படுத்தி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த முழு அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

"டிட்வா" சூறாவளியினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சொத்து சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்குதல், வீடுகள் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி இதன்போது விரிவாக ஆராய்ந்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 25,000 ரூபா மற்றும் 50,000 ரூபா கொடுப்பனவுகள் மற்றும் மாணவர்களுக்கான 15,000 ரூபா மற்றும் 10,000 ரூபா கொடுப்பனவுகள் மாத்தளை மாவட்டத்தில் தற்போது முழுமையாக வழங்கி முடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அனர்த்த நிலைமை காரணமாக மாவட்டத்தில் 254 வீடுகள் முழுமையாகவும், 3,829 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. மதிப்பீடின்றி நஷ்டஈடு வழங்கக்கூடிய அனைத்து வீடுகளுக்கும் தற்போது நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய வீடுகளுக்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

காணி உரிமை இல்லாமை, அதிக அபாயமுள்ள பிரதேசங்களில் அமைந்திருத்தல் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளுக்குச் சொந்தமான நிலங்கள் போன்ற காரணங்களால் எழுந்துள்ள சிக்கல்களுக்கு வழங்கக்கூடிய மாற்றுத் தீர்வுகள் குறித்தும் இங்கு விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இப்பணிகளை விரைவுபடுத்துவதற்காக நிலவும் அளவுகோள்களில் திருத்தங்களைக் கொண்டுவருவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களுக்கான நஷ்டஈடு, அதிக அபாய நிலை காரணமாக வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள், வீட்டு வாடகைக் கொடுப்பனவு, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் வீடுகளை நிர்மாணித்தல், காணிகளை கையகப்படுத்துதல் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்தும் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

அதிக அபாயமான பிரதேசங்களில் உள்ள அனைத்துக் குடும்பங்களையும் அங்கிருந்து வெளியேற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்கான சட்டங்களை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டியதோடு, அவர்களை விரைவாக வேறு இடங்களில் குடியேற்றுவதை பிரதானமான பணியாகக் கருதுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதேபோல், சூறாவளியினால் பெற்றோரை இழந்த பிள்ளைகளைப் பராமரிப்பது மற்றும் அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பது குறித்து வினவிய ஜனாதிபதி, அந்த ஒவ்வொரு பிள்ளைக்காகவும் தனித்தனியான திட்டங்களைத் தயாரித்து மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்புமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மாவட்டத்தின் பாடசாலைக் கட்டமைப்பில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டது. பாடசாலைகளை மீள நிர்மாணிப்பதற்காக கல்வி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்திற்கு இணங்க, அதற்குத் தேவையான காணிகளை விடுவிப்பதன் அவசியத்தையும் பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணிப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும், "டிட்வா" சூறாவளியால் சேதமடைந்த மாத்தளை மாவட்ட வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் ஜனாதிபதி கேட்டறிந்தார். மாவட்டத்தில் 16 பிரதான வீதிகளும் (யு மற்றும் டீ தர வீதிகள்) 02 பாலங்களும் சேதமடைந்திருந்தன.

இதில் 16 வீதிகளும் ஒரு பாலமும் தற்போது நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். எஞ்சியுள்ள மொரகஹகந்த பாலத்தை நிரந்தரப் பாலமாக துரிதமாக நிர்மாணிப்பது குறித்தும் இதன் போது ஆலோசிக்கப்பட்டது.

2026 வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மாத்தளை நகர அபிவிருத்தித் திட்டம் மற்றும் தம்புள்ளை வைத்தியசாலையை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டது. இத்திட்டங்களை உரிய காலப்பகுதிக்குள் நிறைவேற்றி அதன் பயன்களை மக்களுக்கு வழங்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் கமகெதர திஸாநாயக்க, மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபயகோன், பாராளுமன்ற உறுப்பினர்களான சுனில் பியன்வில, தினேஷ் ஹேமந்த, மத்திய மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்க, பிரதேச சபை தலைவர்கள், உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகளும், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான பிரபாத் சந்திரகீர்த்தி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, மாத்தளை மாவட்ட செயலாளர் எல்.பி. மதநாயக்க உள்ளிட்ட தொடர்புள்ள திணைக்களங்களின் பிரதானிகள், பாதுகாப்புப் பிரிவு பிரதிநிதிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 MAY 13 - WEDNESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# இலங்கை குறித்து எவ்வாறான அணுகுமுறையை கடைப்பிடிப்பார் விஜய்!

தென் இந்தியாவின் தமிழ் நாட்டின் முதலமைச்சராக நடிகர் விஜய் கடந்த 2026.05.10 ஆம் திகதி நடைபெற்ற சுப நேரத்தில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றார். அவரது தமிழ் வெற்றிக் கழகம் கட்சி நடந்து முடிந்த தேர்தலில் பெரும்பான்மை பலத்தை பெறத் தவறியதால் அவர் முதலமைச்சராக முடியுமா?, முடியாமல் போகுமா? என்ற சந்தேகம் சில தினங்களாக நீடித்து வந்த நிலையில், 120 ஆவன பலத்துடன் முதலமைச்சராகும் வரத்தைப் பெற்றுக்கொண்டார். அவருக்கு காங்கிரஸ் கட்சி, இந்திய முஸ்லிம் லீக் கட்சி உட்பட 06 சிறிய கட்சிகள் வழங்கிய ஆதரவால் ஆட்சி அமைக்க குறைவாக இருந்து ஆசனங்களை பெற்று முதலமைச்சராக பதவியேற்றார். இவர் தமிழ் சினிமாவில் கொடி கட்டிப்பறந்த நடிகராவார். தமிழ் வெற்றிக் கழகம் (த.வி.க.) என்று புதிய கட்சியை ஆரம்பித்து மிகவும் குறுகிய காலத்திற்குள் பிரபல்யம் அடைந்து தமிழ் நாட்டு அரசியலில் முதலமைச்சர் என்ற அரசியலில் புகழ் ஏணியின் உச்சிக்கு வருவதற்கு ரசிகர்களின் ஆதரவே இவரை காரணம் எனலாம்.

அதற்காக அவர் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளும் செல்வாக்குச் செலுத்தி இருக்கின்றன. எவ்வாறாயினும் தமிழ் நாட்டு அரசில் இலங்கையின் அரசியலுக்கும் தாக்கத்தை ஏற்படுத்துவதென்பதை நாம் மறந்து விட முடியாது. ஏற்கனவே முதலமைச்சர்களாக இருந்த அறிஞர் அண்ணா, காமராஜர், கருணாநிதி, எம்.ஜி. ராமச்சந்திரன் (எம்.ஜி.ஆர்), ஜெயலலிதா, மு.க. ஸ்டாலின் ஆகிய எல்லா முதலமைச்சர்களும் பதவிக்கு வர முன்னரும் பதவிக்கு வந்த பின்னரும் இலங்கையை அவர்களது அரசிலின் நீடித்த பயணத்திற்கு தேவைப்பட்ட ஒரு பாலமாக பயன்படுத்தியே பயணித்துள்ளனர். அதிலும் எம்.ஜி. ஆர், ஜெயலலிதா, கருணாநிதி அகியோரின் இலங்கை குறித்த தலையீடு இலங்கை அரசியலில் கணிசமான தாக்கத்தை கடந்த காலங்களில் ஏற்படுத்தி இருப்பதை நாம் மறந்து விட முடியாது.

சில சந்தர்ப்பங்களிஒல் தமிழ்நாட்டு அரசியலில் தலையீடு இலங்கைக்கு கசப்பான அனுபவங்களைத் தந்ததும் உண்டு. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பயிற்சிகளை வழங்கி ஆயுதம் வழங்கியமை, அதன் பின்னர் இலங்கையில் இனப்பிரச்சினை விவகாரத்தில் அவ்வப்போது மூக்கை நுழைத்து முரண்பாடான சூழ்நிலைகளை ஏற்படுத்தியமை மற்றும் கச்சதீவை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றமை போன்ற விடயங்களைக் குறிப்பிடலாம். அதேபோன்று நீண்ட காலமாக வடபகுதி கடலில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டு வருவதாலும் நீண்ட காலமாக ஒருவிதமான முரண்பாடு இருந்து வருகின்றது.

இவ்வாறு பார்க்கின்ற போது இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் நேசக்கரம் நீட்டும் ஓர் அயலவனாக தமிழ்நாடும் பதவிக்கு வரும் முதலமைச்சர்களும் இருந்து வந்துள்ளனர். அந்த வரிசையில் போதுமான அரசியல் அனுபவமும் முதிர்ச்சியும் இல்லாத சீ. ஜோசப் விஜய் என்ற முதலமைச்சர் விஜய்க்கு இலங்கை மீது பாரிய பொறுப்பு காத்திருக்கின்றது என்றே சொல்ல வேண்டும். பாரத மாதாவின் மத்திய அரசாங்கம் எப்போதும் இலங்கையை தமது சட்டைப் பைக்குள் பிடித்து வைத்திருக்க எந்தளவுக்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றதோ அதேஅளவிற்கு இலங்கை வாழ் தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் வகையில் சிறப்பான ஆட்சி நிர்வாகத்தை முன்னெடுப் பதென்பது விஜய் மீதுள்ள பிரதான சவாலாகும்.

அதேநேரம் பழைய பிரச்சினைகள், முரண்பாடுகளை மறந்து இலங்கை வாழ் தமிழர்களை உடன்பிறப்புக்களாக நினைத்து அவர்களின் நலனில் அக்கறை காட்டும் அதே நேரம் கடந்த காலங்களில் நடந்தது போன்று கச்சதீவுப் பிரச்சினை, மீனவர் பிரச்சினை போன்றவற்றை வைத்து கடுமையான போக்கை கடைபிடிக்காமல் இந்தப் பிரச்சினைகளை சுமுகமான முறையில் அணுகி இலங்கையுடனான இருதரப்பு இராஜதந்திர உறவை பலமடையச் செய்யும் வகையில் நடந்து கொள்ள வேண்டி இருக்கின்றது. அத்துடன் விஜயின் அரசாங்கம் சிறய கட்சிகளது 12 ஆசனங்களின் உதவியுடன் ஆட்சி அமைத்திருப்பதால் அந்த கட்சிகளைச் சேர்ந்தவர்களை குறிப்பாக முஸ்லிம்கள் உட்பட அனைத்து தரப்பினரையும் அரவணைத்து அன்பும் கருணையும் பொழியும் நல்லாட்சியாக முன்னெடுக்கத் தேவையான ஆட்சி வியூகங்களை வகுத்து தடங்கல் ஏற்படாத பயணம் தொடர வேண்டும் என்பதே நேச நாடான இலங்கை வாழ் மக்களதும் பிரார்த்தனையாகும்.

வாழ்க விஜய்! வளர்க தமிழ்நாடு! நீளட்டும் நேசக்கரம்!

# கப்புவத்தை அந்நூரில் இருமாடி கட்டிட அடிக்கல் நடும் நிகழ்வு



(அஷ்ரப் ஏ சமத்)

வெலிகம கப்புவத்தை அந்நூர் மஹா வித்தியாலயத்தில் ஞயிற்றுக்கிழமை 10 மே.2026 குவைத் அரசாங்கத்தின் இலங்கையில் உள்ள பாடசாலைகளுக்கு வகுப்பறைகள் கட்டிட வசதியளிக்கும் திட்டத்தின் கீழ் அல் ஹிமா இஸ்லாமிக் சேவிர்ஸ் நிறுவனத்தின் கீழ் இரண்டு மாடிக்கான வகுப்பறைக் கட்டிடத்திற்கான அடிக்கல் நடும் வைபவத் கல்லூரி அதிபர் எம்.கே.எம் றிகாஸ் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக எரிசக்தி வலுவூட்டல் பிரதியமைச்சர் பொறியியலாளர் அர்க்கம் இல்யாஸ் , மற்றும் குவைத் தூதுதரகத்தின் அதிகாரி அஷ்ஷேக் பிர்தௌஸ் (நளிமி) குவைத்திட்ட பணிப்பாளர் அஷ்ஷேக் எம்.ஏ.ஏ நூறுல்லாஹ் (நளிமி) அக்குரஸ்ச வலய கல்விப் பணிப்பாளர் திருமதி எச்.வை.டி.பிரியதர்சனி, மாத்தரை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்தான விஜயசேகர அல் ஹாஜ் எம். ஏ.எம் சக்வான், ஏ.ஆர்.எம் அ மினுடீன், எம்.ஏ.எம் சர்வான் மற்றும் பிரதேச சபை உறுப்பிணர்கள் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அதிபர்கள் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர்

இங்கு உரையாற்றிய பிரதியமைச்சர் இப் பாடசாலையில் 164 வருடங்கள் பழமை வாய்ந்ததொரு கல்லூரியாகும் அன்று நிர்மாணிக்கப்பட்ட இரண்டு கட்டிடங்கள் இன்றும் காட்சியளிக்கின்றன. கல்லூரி அதிபர் இங்கு இக் கல்லூரியின் பௌதீக குறைபாடுகள் பற்றி உரையாற்றினார். இங்கு கனனி, விஞ்ஞான ஆய்வுகூட மற்றும் நூலகங்களில் நூல்கள் இல்லாமல் இப் பாடசாலை இயங்கி வருகின்றது. எதிர்காலத்தில் இக் கல்லூரியினை சுற்றி மதில் நிர்மாணிப்பதற்கும் 20 மில்லியம் ருபாவை திட்டமிடப்பட்டுள்ளது.

அத்திட்டம் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் அத்துடன் அக்குரஸ்ச கல்விவலயத்தில் 100க்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. எதிர்காலத்தில் அரசாங்கம் 25 ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு தீர்மாணித்துள்ளது. அதில் இப் பாடசாலைக்கும் ஆசிரியர்கள் கிடைப்பதற்கு வழிவகுக்கப்படும்.

இக் கல்லூாரிக்கு குவைத் அரசின் பாடசாலைக் கட்டிடங்கள் நிர்மாணிக்கும் கொடுக்கும் திட்டத்தில் அரபு நாடுகள் தான் நமக்கு உதவிவருகின்றன. அதற்காக நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருத்தல் வேண்டும் என அஷ்ஷேக் நூறுல்லாஹ் நளிமி தெரிவித்தார் அத்துடன் இப் பாடசாலைக்கு கட்டிடத்தினை பெற்றுக் கொள்வதற்கு எவ்வித தடை ஏற்பட்டும் அதனை எவ்வாறேனும் ஆரம்பிக்க வேண்டும் என ஊர் மக்கள் பாடசாலை அபிவிருத்திக்குழு வர்த்தக சங்கங்கள் முழு மூச்சாக முன் நின்று அதனை ஏற்படுத்தி விட்டனர் அடுத்த கட்டிட திறப்பு விழாவிற்கு குவைத் தூதுவர் இங்கு சமுகம் தந்து அதனை திறந்து வைப்பார் – எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.



எம். கே. ஷாகுல் ஹமீது
திருச்சி




# முஸ்லிம் லீக் அலுவலகத்தில் முதலமைச்சர் விஜய்க்கு சிறப்பான வரவேற்பு










சென்னை மண்ணடியில் அமைந்துள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைமை அலுவலகமான காயிதே மில்லத் மன்ஜிலுக்கு 12-05-2026 செவ்வாய்கிழமை வருகை தந்து தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீனிடம் வாழ்த்து பெற்றார்.

முன்னாள் முதல் வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், மதிமுக பொதுச் செயலர் வைகோ, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங் கிணைப்பாளர் சீமான், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோரின் இல்லங்களுக்குச் சென்று அவர்களைச் சந்தித்து விஜய் வாழ்த்துப் பெற்றார்.

இந்த நிலையில், சட்டப் பேரவையில் திங்கள் கிழமை நடைபெற்ற எம்எல்ஏக்கள் பதவியேற்பு நிகழ்வு முடிந்த வுடன், முதல்வர் விஜய் சென்னை ஆழ்வார் பேட் டையில் உள்ள திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் இல்லத்துக்குச் சென்றார். திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு பொன் னாடை போர்த்தி விஜய் வாழ்த்து பெற்றார்.

இதையடுத்து, மதிமுக பொதுச் செயலர் வைகோவின் இல்லத்துக்குச் சென்ற முதல்வர் விஜய்யை, துரை வைகோ எம்.பி. உற்சாகமாக வரவேற்றார். பின்னர், வைகோவை சந்தித்து விஜய் வாழ்த்து பெற்றார். அவரை வீட்டு வாசல் வரை வந்து வைகோ வழியனுப்பி வைத்தார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், பாமக தலைவர் அன்புமணி ஆகியோரின் இல்லங்களுக்கும் சென்று அவர்களைச் சந்தித்து முதல்வர் விஜய் வாழ்த்து பெற்றார்.

இந்நிலையில் 12-05-2026 செவ்வாய்க்கிழமை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைமை அலுவலகத்திற்கு ஜோசப் விஜய் வருகை தந்தார். அவருக்கு தலைமை நிலையம் சார்பில் சால்வை அணிவித்து பூங்கொத்து கொடுத்து பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வரவேற்றார்.

தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீனுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்து பெற்றார். முதல்வரு டன் அமைச்சர்கள் புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, இ.யூ. முஸ்லிம் லீக் மாநில பொதுச்செயலாளர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், பொருளாளர் எம்.எஸ்.ஏ. ஷாஜஹான், மாநில முதன்மை துணைத்தலைவர் எம். அப்துல் ரஹ்மான், மாநில துணைத் தலைவரும் இராம நாதபுரம் பாராளுமன்ற உறுப்பினருமான கே. நவாஸ் கனி, வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பி. சையது பாஷரூக் பாஷா, பாபநாசம் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.எம். ஷாஜஹான், தேசிய செயலாளர் அப்துல் பாஷித், மாநில துணைத் தலைவர்கள் கே.டி. கிஸர் முஹம்மது, சே.மு.மு. முஹம்மது அலி, ஆர்.டி.பி. தாவூது பாஷா, தேசிய துணைச் செயலாளர் பாத்திமா முஸப்பர், மாநில தலைமை நிலையச் செயலாளர் கே.எம். நிஜாமுதீன், மாநில செயலாளர்கள் ஆப்பனூர் ஜப்பருல்லாஹ், எஸ்.ஏ. இப்ராஹிம் மக்கி, அப்துல் காதர் ஷரீப், அப்துல் காலித், மாநில செயலாளர் வழக்கறிஞர் வி.ஜீவகிரிதரன், கே.எம். நிஜாம் மற்றும் அணிகளின் தலைவர், செயலாளர்கள், பொருளாளர்கள் சென்னை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, திருவள்ளூர் மேற்கு, கிழக்கு, காஞ்சிபுரம், செங்கல்பட்டு வடக்கு, தெற்கு, வடக்கு ஆகிய மாவட்ட செயலாளர்கள், பொருளாள்கள் மற்றும் திரளாக பங்கேற்றனர்.

தமிழக முதல்வர் ஜோசப் விஜய்க்கு மணிச்சுடர் செய்தியாசிரியர் ஏ.கே. முஹம்மது காசிம் தலைமை யில் டி.டி.பி. ஆப்ரேட்டர் பிரமிளா, உள்ளிட்ட ஊழியர் கள் வாழ்த்து தெரிவித்தனர். முதல்வர் விஜய்யை பார்ப்பதற் காக காலையிலிருந்து இருந்த அலுவலக தூ ய்மை பணியாளர் லட்சுமி அம்மாளிடம் கைகுலுக்கி வாழ்த்து பெற்றார்.










# உழ்ஹிய்யா சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி! பைஸர் முஸ்தபா ஜனாதிபதிக்கு பாராட்டு

**( ஐ. ஏ. காதிர் கான் )**

வெசாக் வாரத்தை முன்னிட்டு உழ்ஹிய்யாக் கிரியையினை நிறைவேற்றலாமா? முடியாதா? என்ற சர்ச்சைக்கு அரசாங்கம் முற்றுப் புள்ளி வைத்துள்ளதுடன், மிகவும் உணர்வு பூர்வமான இந்த விடயத்தை மிகச்சரியாகவும் துல்லியமாகவும் கையாண்டு, முஸ்லிம்களும் சிங்கள மக்களும் திருப்தியுறும் வகையிலும் தனது தீர்வைத் தந்துள்ளது.

இதனையிட்டு, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும், அவரது செயலாளர் மற்றும் அரச தரப்பினருக்கும், பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா, தனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளார்.

இது பற்றி பைஸர் முஸ்தபா அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இவ் வருடத்திற்கான வெசாக் வாரம் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் ஜூன் 2 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், இறைச்சி அறுப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றுக்கு மே 30, 31 மற்றும் ஜூன் 1 ஆகிய திகதிகளில் மாத்திரமே தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆலோக்க பண்டாரவினால், கடந்த 07 ஆம் திகதி விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன், நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களினது பிரதம செயலாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட சுற்றறிக்கை மூலம், முஸ்லிம் சமூகம் ஹஜ்ஜூப் பெருநாள் உழ்ஹிய்யாக் கடமைகளை சிரமமின்றி நிறைவேற்றுவதற்கான வழிவகையாக அரசாங்கம் செய்து கொடுத்துள்ளதைப் பார்க்கின்றோம். இதன் பிரகாரம், எதிர்வரும் 27 அல்லது 28 ஆம் திகதி ஹஜ்ஜ/ப் பெருநாள் தினமாயின் அன்றும், மறுநாள் "அய்யாமுத் தஷ்ரீக்" முதலாம் நாளன்றும் உழ்ஹிய்யாக் கிரியையினை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பதையும் தெளிவாக அறிந்து கொள்கின்றோம்.



எனவே, முஸ்லிம்கள் தத்தமது பிரதேச உள்ளூராட்சி நிறுவனங்களிடம் முறையாக அனுமதிகளைப் பெற்று, குறிப்பிட்ட தினங்களில் மாத்திரம் உழ்ஹிய்யாக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன் என்றும் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஹஜ்ஜூப் பெருநாள் தினத்தன்று உழ்ஹிய்யாக் கொடுக்க முடியாமல் தடுப்பதன் மூலம், நாட்டில் இரு சமூகங்களுக்கு இடையில் குழப்பத்தை உருவாக்க முயன்ற இனவாதப் போக்குடைய சில தீய சக்திகளின் கொள்கைகளுக்கு அரசாங்கம் முற்றுப் புள்ளி வைத்துள்ளதையும் இத் தருணத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது என்றும், பைஸர் முஸ்தபா அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பொதுநிர்வாக மா. சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சருடன் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா சந்திப்பு



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சாய்ந்தமருது நகரசபை, கல்முனை மாநகரசபை தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பு மற்றும் எல்லை நிர்ணயம் தொடர்பாக (08) பொதுநிர்வாக மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கர் அமைச்சர் சந்தன அபேரத்ன அவர்களைச் சந்தித்து, பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா அவர்கள் கலந்துரையாடி எதிர்கால முன்னெடுப்புகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

## அம்பாறை மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம்





**(இஸட்.ஏ. றஹ்மான்)**

அம்பாரை மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் ஓய்வு பெற்ற சமுர்த்தி முகாமையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் (10) நிந்தவூர் அமீர் பெலசில் மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் சங்கத்தின் தலைவர் டீ.எம்.குணவர்தன தலைமையில் நடைபெற்றது . இக்கூட்டத்தில் அதிதிகளாக அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர் சங்கத்தின்தலைவர் சோமசிறி லியனகே மற்றும் அம்பாரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.சீ.அன்வர் ஆகியோர் பங்கேற்றனர்.



இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்க முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## சந்திரிக்காவின் மனதைக் கொள்ளை கொண்ட தவெக விஜய்யிற்கு வாழ்த்து



**( ஐ. ஏ. காதிர் கான் )**

தமிழக சட்ட சபைத் தேர்தலில் தமிழக முதலமைச்சராகத் தெரிவாகியுள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய்யிற்கு, முன்னாள் இலங்கையின்நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகச் செயற்பட்ட சந்திரிக்கா பண்டாரநாயக்க குமார துங்கவினால் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த தேர்தலில் சிறப்பான வெற்றியைப் பதிவு செய்துள்ளதாக, தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யிற்கு நேற்று அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் புதிய அத்தியாயம் முன்னேற்றத்தையும், கருணையையும் கடந்த காலங்களில் மற்றவர்கள் விட்டுச் சென்ற இடைவெளிகளில் புரிதலை ஏற்படுத்துவதற்கான ஆற்றலையும் கொண்டு வரும் என எதிர்பார்க்கின்றேன். மக்கள் அனைவரும் மொழி, மதம், அடையாளம் ஆகியவற்றோடு, உண்மையாக எதிர்பார்ப்பது சமூக முன்னேற்றம், நீதி மற்றும் நிலையான தன்மைகளையே ஆகும் என்றும், சந்திரிக்கா அனுப்பிவைத்துள்ள அந்த வாழ்த்துக் கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## புத்தளம் அல் மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கௌரவிப்பு மற்றும் பிரியாவிடை நிகழ்வு





**(எம்.எச்.எம்.சியாஜ்)**

புத்தளம் பெருக்குவட்டான் அல் மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் உயர் தர பரீட்சையில் சித்தி அடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் மற்றும் பரிட்சைக்கு தோற்றிய ஏனைய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், பாடசாலையிலிருந்து இட மாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்கான பிரியாவிடை நிகழ்வும் (07) பாடசாலையின் அதிபர் எஸ்.எச்.எம்.அசான் தலைமையில் மிக சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் தெற்கு கோட்டக் கல்விப் பணிமனையின் கல்விப் பணிப்பாளர் எம். ஐ.எம். நௌஸாத் கலந்து சிறப்பித்தார்.


இம்முறை கல்வி பொதுத் தராதர உயர் பரிட்சைக்கு தோற்றி பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் பாடசாலையில் கற்பித்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கான பிரியாவிடை நிகழ்வும் சிறப்பாக இடம் பெற்றது.

இதேவேளை மாணவர்களின் இந்த வெற்றிக்கு வழிகாட்டியாக இருந்த ஆசிரியர்களுக்கும் பரிசளிகள் வழங்கி கௌரவிக்கப்



பட்டதோடு, புதிதாக கடமையேற்றுள்ள ஆசிரியர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஊழல் மோசடி விசாரணைகளும் தற்கொலைகளின் மர்மமும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்





திறைசேரியில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு செலுத்தப்பட்ட பணம் 75 கோடி ரூபா (25 இலட்சம் அமெரிக்க டொலர்கள்) மாயமாக மறைந்தமை தொடர்பாக தகவல்களை வெளிப்படுத்திய அதே திறைசேரியின் அதிகாரியான ரங்க ராஜபக்ஷவின் மரணம் தொடர்பாக நாட்டில் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்ற நிலையில், ஸ்ரீ லங்கன் எயார் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன 2026.05.08 ஆம் திகதி காலை கொள்ளுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் அறையில் மர்மான முறையில் இறந்து கிடந்தமை தொடர்பாகவும் அரசியல் வட்டாரங்களில் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. குறித்த கபில சந்திரசேன முன்னாள் கிரிக்கெட் நட்சத்திரம் அரவிந்த டி. சில்வாவின் மைத்துனர் ஆவார். மனைவியின் சகோதரியின் கணவராவார். இந்த மரணம் நிகழ்ந்திருப்பதும் கொள்ளுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள அரவிந்த டி.சில்வாவின் வீட்டின் மேல் மாடியில் அறையொன்றில் ஆகும்.

இந்த மரணம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கின்றது. ஏன் இவர் இவ்வாறு மரணித்தார். இவர் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? என்ற அடிப்படையில் பல விதமான கேள்விகள் எழுப்பப் பட்டு வருகின்றன. அவ்வாறு தற்கொலை செய்து கொள்வதாக இருந்தால் அதற்கான பின்னணி, காரணங்கள் யாவை என்ற கேள்விக்கு விடை காணும் வகையில் விசாரணைகள் தொடர்கின்றன. அதற்காக 05 சட்ட வைத்திய நிபுணர்களைக் கொண்டு மரண விசாரணையை நடத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டு ள்ளார். இந்த சந்திரசேன ஏன் தற்கொலை செய்து கொண்டார் என்று பார்த்தால் பல விடயங்கள் புலனாகின்றன. மர்மமான முறையில் இறந்து கிடந்த சந்திரசேன 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு முறையற்ற ஒரு ஒப்பந்தம் மூலம் இடம்பெற்ற 10 எயார்பஸ் கொள்வனவில் சுமார் 60 கோடி ரூபா (20 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) இலஞ்சம் பெற்றார் என்ற அடிப்படையில் இங்கிலாந்தில் நீதிமன்றம் ஒன்றில் விசாரணை செய்யப்பட்ட வழக்கொன்றில் குற்றவாளியாக கருதப்பட்டவர் ஆவார். 2020 ஆம் ஆண்டு இலங்கையில் அது தொடர்பான வழக்கொன்றில் கைதாகி விடுதலை செய்யப்பட்டிருந்தார். கடந்த பல வருடங்களாக புதைந்து போன நிலையில் இருந்த அந்த வழக்கு மீண்டும் இலஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவால் தோண்டி எடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்த நிலையில், அந்த வழக்கில் 2026.05.05 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டி ருந்தார். ஆனாலும் பிணையில் வெளியே வருவதற்காக பிணை வழங்க மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட இரண்டு நபர்களும் போலியான ஆள் அடையாளத்தை உடையவர்கள் என்றும் அவர்களுக்கு 15,000 ரூபா செலுத்தப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் இருந்த கபில சந்திரசேனவை மீண்டும் கைது செய்து மன்றில் ஆஜர்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு மரணித்துள்ளார்.

இவர் இறந்திருந்தது அரவிந்த டி.சில்வாவின் வீட்டில் ஆகும். மரணிப்பதற்கு முன்னைய தினம் அங்கு சென்று மறுநாள் நீதிமன்றத்தில் ஆஜராவது தொடர்பாக சட்டத்தரணியை அழைத்து ஆலோசனை பெறுவது தொடர்பாக கலந்துரையாடி இராப் போசனமும் அருந்திய பின்னர் படுக்கைக்கு செல்வதாக அறைக்குள் போனவர் காலையில் அதே அறையில் சடலமாக இறந்து கிடந்துள்ளார். ஏற்கனவே எயார் பஸ் கொள்வனவு விவகாரத்தில் பெறப்பட்ட பணம் இவரது மனைவியின் கணக்கிற்கு செலுத்தப்பட்டு பின்னர் இவரது வங்கி கணக்கிற்கு மாற்றப்பட்டமை கண்டறியப் பட்டிருக்கின்றது. இவ்வாறு பார்க்கின்ற போது இவர் கொல்லப்பட்டாரா அல்லது மேலும் பல உண்மைகள் வெளிப்பட்டால் பின் விளைவுகள் மோசமானதாக அமையும் என்ற அடிப்படையில் மன உழைச்சல் காரணமாக தற்கொலை செய்து கொண்டாரா? என்ற விடயம் 11 ஆம் திகதியின் பின்னரே வெளிப்படலாம்.

இவரது ஊழல் தொடர்பான விசாரணையில் வெளிப்பட்ட ஒரு விடயம் அவர் பெற்றுக் கொண்ட 60 கோடி ரூபா இலஞ்சத்தில் இருந்து சுமார் 06 கோடி ஷரூபா வரையில் மூன்று சந்தர்ப்பங்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கியதாக இலஞ்ச மற்றும் ஊழல்கள் தொடர்பான ஆணைக்கு ழுவுக்கு தெரிவித்திருந்தார். அத்துடன் தாம் அரச சாட்சியாக மாறி மேலும் பலரின் பெயர்களை வெளிப் படுத்த தயாராக இருப்பதாகவும் ஆணைக்குழுவுக்கு அவரது சட்டத்தரணி ஊடாக சத்திய கடதாசி ஒன்றின் மூலம் அறிவித்திருந்த நிலையில் ஆணைக்குழு அதற்கு இணங் கவில்லை. மக்களது வரிப்பணத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட எயார் பஸ் கொள்வனவில் இலஞ்சம் பெற்ற ஓர் அதிகாரியை அரச சாட்சியாக மாற்றி காப்பாற்றுவதற்கு ஆணைக்குழு தயாராக இருக்கவில்லை. அத்துடன் இவரால் பெயர் வெளிப்படுத்தப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ தொடர்பாக ஆணைக்குழு மேலும் தகவல்களை பெற்று இவரிடம் இருந்து 06 இலட்சம் ரூபா பெற்றமை தொடர்பாக ஆவணங்களை பரிசோதித்து உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் ராஜபக்ஷவை வாக்கு மூலம் பெறுவதற் காக 2026.05.12 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு இலஞ்ச ஆணைக்குழுவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது என்ற தகவல்களும் வெளியாகி இருக்கின்றது. இந்த நிலையில் தான் மஹிந்தவின் பெயரை வெளிப்படுத்திய இவர் மரணமடைந்துள்ளார்.

இந்நிலையில் உதய கம்மன்பில தெரிவித்த மற்றுமோர் விடயம் தொடர்பாக அவருக்கு எதிராக வாக்கு மூலம் பெறப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யபட இருக்கின்றது என்ற தகவலும் வெளியாகி இருக்கின்றது. 25 இலட்சம் அமெரிக்க டொலர் மதிப்புள்ள (75 கோடி ரூபா) மாயமாக மறைந்தது தொடர்பாக திறைசேரியின் வெளிநாட்டு வளப் பிரிவு அதிகாரியான ரங்க ராஜபக்ஷ என்பவரின் மரணம் தொடர்பாக தெரிவித்த கருத்து காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டிருக் கின்றது. இந்த ராஜபக்ஷ என்பவர் மன விரக்தி காரணமாக கூறிய ஆயுதத்தால் தன்னை காயப்படுத்திக் கொண்டதால் ஏற்பட்ட அதிக இரத்த போக்கு காரணமாகவே இறந்துள்ளார் என்று மரண விசாரணை நடத்திய நான்கு சட்ட வைத்திய அதிகாரிகளது அறிக்கைகள் தெரிவித்திருக்கின்றது. நிலைமை இவ்வாறிருக்க அவரது மனைவி குளியாப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ராஜபக்ஷவின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக முறைப்பாடு செய்திருப்பதாக தெரிவித்தமை உண்மைக்கு புறம்பானதாகும். இது போன்ற கருத்துக்களும் சமூக ஊடகங்களால் முன்வைக்கப் பட்ட இத்தகைய தகவல்கள் காரணமாகவே அவர் மரணத்தை ஏற்படுத்திக்கொள்ளும் நிலை ஏற்பட்டதாக குளியாப் பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ராஜபக்ஷவின் மனைவியால் 2026.05.06 ஆம் திகதி முறைப்பாடொன்று செய்யப்பட்டிருக்கின்றது. இந்த தகவல்களை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் 2026.05.05 ஆம் திகதி வெளிப்படுத்தினார். இவ்விடயம் தொடர்பாக வாக்குமூலம் பெற உதய கம்மன்பில 2026.05.09 ஆம் திகதி சனிக்கிழமை குளியாப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப் பட்டிருந்தார்.

உதய கம்மன்பிலவின் குற்றச்சாட்டாக அமைந்தது குறித்த நபர் தற்கொலை செய்து கொண்டார் என்று தகவலை வெளியிட்டு திறைசேரி நிதி மாயமாக மறைந்தமை தொடர்பான விசாரணைகள் மூடி மறைக்கப்பட முயற்சி எடுக்கப்படு கின்றது என்பதாகும். அதேபோன்று ஸ்ரீ லங்கன் விமான சேவை முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி மரணம் தொடர்பாக ஒருசிலர் அரசியல் காரணங்களை முன்வைத்து ராஜபக்ஷ குடும்பத்திற்கு விரல் நீட்ட தயாராகி வருகின்றனர். எவ்வாறோ முக்கியமான வழக்குகளில் இவ்வாறு சாட்சிகள் மர்மமான முறையில் மரணத்தை தழுவியமையானது அந்த வழக்கு விசாரணைகளை அல்லது ஊழல்களின் உண்மைகள் வெளிவருவதை தடுத்து முற்றாக விசாரணைகளை திசை திருப்பக் காரணமாக அமையலாம் என்பது நாட்டிற்கு பெரும் பாதிப்பாகும்.

# மக்களின் நிலம், வளம், வாழ்வுரிமை பாதுகாக்கப்பட வேண்டும்; உடனடி தீர்வு அவசியம்!

## - ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் கலீலுர் ரஹ்மான் !



நாட்டின் பல பகுதிகளில் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சாதாரண மக்களின் அடிப்படை வாழ்வுரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படுகின்றமை மிகுந்த கவலையளிக்கிறது. திருகோண மலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கறுமலையூற்று கடற்கரைக்கு பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் செல்ல விமானப்படையினரால் திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளமை மிகவும் கண்டிக்கத்தக்கது. இந்தக் கடற்பரப்பை நம்பியே வாழ்ந்து வரும் நூற்றுக் கணக்கான மீனவக் குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்தை இழக்கும் அபாயத்தில் தள்ளப்பட்டு ள்ளனர் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும், முப்பது வருட யுத்த காலத்திலும் விதிக்கப்படாத கட்டுப்பாடுகள் இன்று மக்கள்மீது திணிக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். தற்போதைய ஜனாதிபதி மக்கள் மையப்படுத்தப் பட்ட அரசியல் கலாசாரத்தையும் ஜனநாயக சூழலையும் உருவாக்க முயற்சிக்கும் இந்நேரத்தில், பாதுகாப்பு தரப்பினரின் தன்னிச்சையான நடவடிக்கைகள் அரசாங்கத்தின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

மேலும் "விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பெனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளைநிலங்களை உடனடியாகத் திருப்பிக் கொடு", "பொய்கள் வேண்டாம்", "விவசாயிகளை இப்படியா நடத்துவது?" போன்ற வாசகங்களை ஏந்தியவாறு முத்து நகர் விவசாயிகள் மற்றும் மக்கள் போராட்ட இயக்கம், அகில இலங்கை விவசாய சம்மேளன பிரதிநிதிகள் இணைந்து முன்னெடுத்து வரும் சத்தியக்கிரகப் போராட்டம் மக்களின் வேதனையின் வெளிப்பாடாகும்.

விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் மக்களின் காணிகளை அபகரித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை சீரழிக்கும் எந்த அபிவிருத்தித் திட்டமும் உண்மையான அபிவிருத்தி யாக கருதப்பட முடியாது. கடந்த அரசாங்கம் போலவே தற்போதைய அரசாங்கமும் மக்களின் பிரச்சினைகளை புறக்கணிக்கும் போக்கை கடைப்பிடிப்ப தாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஜனாதிபதி செயலகம் வரை போராடிய விவசாயிகளுக்கு இதுவரை நிலையான தீர்வு வழங்கப்படாதமை மிகவும் வருத்தத்திற்குரியது.

எனவே, ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கறுமலையூற்று கடற்கரையில் விதிக்கப்பட்டுள்ள தடைகள் உடனடியாக நீக்கப்பட்டு, மீனவர்கள் தமது தொழிலை சுதந்திரமாக முன்னெடுக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், முத்து நகர் விவசாயிகளின் காணி பிரச்சினைக்கு உடனடி நீதியான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும், மக்களின் விவசாய நிலங்கள் மற்றும் இயற்கை வளங்கள் அவர்களது சம்மதமின்றி தனியார் அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படக்கூடாது என்றும் கோரிக்கைகளை முன்வைத்து அரசை வலியுறுத்துகிறது.

மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, ஜனநாயக ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் மக்களின் நிலம், வளம், வாழ்வுரிமை மற்றும் தொழிலுரிமை மீறப்படும் போதெல்லாம் எமது குரல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## சுவனச்சோலை போட்டியின் வெற்றியாளர்கள் கௌரவிப்பு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

ஆர்.ஜே.மீடியா ஊடக வலையமைப்பு கடந்த ரமழானை சிறப்பிக்கும் முகமாக ஏற்பாடு செய்த, ரமழான் சுவனச்சோலை போட்டி நிகழ்ச்சியில் தெரிவு செய்யப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கான கௌரவிப்பு விழா, கொழும்பு டவர் மண்டபத்தில் அதன் பணிப்பாளர் ஏ.எம். இன்ஷாப் தலைமையில் (06) இடம்பெற்றது.





இந்நிகழ்வில், சிறப்பு அதிதியாக, வெடின்ங் ட்ரீம் அகடமியின் பணிப்பாளர் பாத்திமா தருபா கலந்து சிறப்பித்ததுடன், மேலும் பல்வேறுபட்ட அதிதிகள் கலந்து கொண்டு, சுவனச்சோலை கேள்வி பதில் போட்டி நிகழ்ச்சியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர் களுக்கான சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி கௌரவித்தமை சிறப்பம்சமாகும். மேலும் இந்நிகழ்வில், பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்ற தரம் ஒன்று மாணவர்களுக்கான சுதேச உணவுகளும் கண்காட்சியும்

**(எம்.எச்.எம்.சியாஜ்)**

கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலை தரம் ஒன்று மாணவர்க ளுக்கான ஆரம்ப விஞ்ஞானமும் சுற்றாடலும் எனும் தலைப்பில் அமைந்த சுதேச உணவு தயாரிப்பு மற்றும் கண்காட்சி நிகழ்வு (07) பாடசாலையின் வளாகத்தில் அதிபர் எம்.எம்.எம்.நௌப் தலைமையில் இடம்பெற்றது



இந் நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உறுப்பினர்கள், தரம் ஒன்று மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதில் பெற்றோர்களால் பாரம்பரிய உணவுகள் தயாரிக்கப்பட்டு காட்சிப் படுத்தப்பட்டதுடன் அதன் நன்மைகள் மற்றும் முக்கியத்துவம் பற்றிய தெளிவுகளும் அதிபரினால் விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## அனுரவின் அரசாங்கம் இனவாதமற்ற அரசு என மீண்டும் நிரூபணம்

### ஸ்ரீ லங்கா ஐக்கிய காங்கிரஸ் அறிக்கை




இந்த வருட உழ்ஹிய்யாவிற்கு எந்தவித அச்சுறுத்தலு மில்லை என பொது நிருவாக அமைச்சு விசேட சுற்றிக்கை வெளியிட்டமை மூலம் ஜபாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கம் இனவாதமற்ற நல்லரசாகம் என்பது மீண்டும் நிஷரூபிக்கப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது பற்றி ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் கட்சி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது, இந்த வருடத்திற்கான வெசாக் வாரம் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஜூன் 2ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், இறைச்சி அறுப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றுக்கு மே 30, 31 மற்றும் ஜுன் 1 ஆகிய திகதிகதிகளில் மாத்தரமே தடை விதிக்கப்பட்டுள்ளது என பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டாரவினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள ஒன்பது மாகணங்களி னதும் பிரதம செயலாளர்களுக்கும் இந்த சுற்றரிக்கை அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஹஜ் பெருநாள் உழ்ஹிய்யா கொடுக்க முடியாமல் தடுப்பதன் மூலம் நாட்டில் இனவாதத்தை உருவாக்க முயன்ற உதய கம்மன்பில போன்றோரின் முகத்தில் அடி விழுந்துள்ளது. மிகவும் உணர்வு பூர்வமான இந்த விடயத்தை அரசாங்கம் மிகச்சரியாக கையாண்டு முஸ்லிம்களும் சிங்கள மக்களும் திருப்தியுறும் வகையில் தனது தீர்வை தந்துள்ளது.

இனியாவது எதிர்க்கட்சிகள் இப்படியான சூழலில் அவசரப்பட்டு பேசி சும்மா கிடக்கும் குட்டையை கிளப்பி நாட்டை நாசமாக்க முனைய வேண்டாம் என ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் கேட்டுக்கொள்கிறது.

## தொட்டவத்தை ஸம்ரின் மௌலவிக்கு சேவை நலன் பாராட்டு








**(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)**

இலங்கையின் தென்னிலங்கையில் அமைந்துள்ள அல்பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா பிரபல அறபுக் கல்லூரியின் விரிவுரையாளராக சேவையாற்றிய மௌலவி முஹம்மத் ஸம்ரின் பஹ்ஜி தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பு-க்காக தெரிவாகியுள்ளார்.

பாணந்துறை தொட்டவத்தையைச் சேர்ந்த மௌலவி எம்.எப்.எம்.ஸம்ரின் பஹ்ஜிக்கான சேவை நலன் பாராட்டு விழாவும் பிரியாவிடை வைபவமும் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக இடம் பெற்றது.

இந்த அறபுக் கல்லூரியில் ஏழு வருடங்கள் பயின்று மௌலவி பட்டம் பெற்ற அவரின் திறமை காரணமாக அதே அறபுக் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்ற அவர் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த அறபு கலாசாலையில் மூன்று வருடங்கள் விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்புக்காக தெரிவாகியுள்ளார். இதனால் தான் பெரிதும் நேசித்த கலாசாலையிலிருந்து மௌலவி ஸம்ரின் கவலையுடன் விடை பெற்றுச் செல்கிறார்.

தென்னிலங்கையின் பிரபலமான அரபுக் கல்லூரியின் அதிபர் அல் உஸ்தாத் மௌலவி ரநூக் அல்பஹ்ஜி தலைமையில் பிரியாவிடை வைபவம் மிகவும் விமரிசையாக இடம்பெற்றது. கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist, Chennai - Tamilnadu, India)





# போரிலிருந்து விடுபட முடியாது தவிக்கும் அமெரிக்கா

அமெரிக்க ஊடகங்களின் அறிக்கைகளின்படி, ஈரானுடன் 14 அம்ச புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எட்டுவதற்கு மிக நெருக்கமான நிலையில் வெள்ளை மாளிகை இருப்பதாக நம்பப்படுகிறது. ஈரான் இந்த 14 அம்ச கோரிக்கைகளை ஏற்று உடனடியாக பேச்சுவார்த்தை மேசைக்கு வர வேண்டும். இல்லை என்றால் கடுமையாக விளைவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என்று வழக்கம் போல் மிரட்டல் விடுத்த நிலையில் தற்போது போரில் சமநிலை அந்தஸ்த்தை ஈரான் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அமெரிக்கா இந்த போரிலிருந்து எப்படியாவது விடை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பல்வேறு நிலைகளில் முயற்சி செய்து வருவதைக் காணலாம். ஆனால் ஈரான் தொடர்ந்து தனது வலிமையான கொள்கை கைவிட மறுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கிய பேச்சுவார்த்தை அந்தஸ்து வெற்றி பெறாத நிலையில் தற்போது அமெரிக்கா துணை அதிபர் ஜே டி வானஸ் கத்தார் பிரதமர் உடனடியாக அமெரிக்கா வுக்கு வர வேண்டும் என்று அவசர அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை ஏற்று கத்தார் பிரதமர் வாஷிங்டன் சென்றுள்ளார்.

அதேநேரத்தில் ஈரான் இன்னும் பல மாதங்கள் வலிமையான முறையில் போர்களத்தில் ஈடுபட முடியும் என்று அமெரிக்கா உளவு அமைப்பு சி ஐ ஏ துல்லியமாக கணித்து விட அந்த செய்தி அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அரச தலைமையை சற்று நடுக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சி ஐ ஏ வழங்கிய முழுமையான தகவல்கள் அடிப்படையில் ஈரான் ராணுவ திறன்கள் வலிமையான இருப்பதாகவும், சிதைவமடைந்த ஏவுகணை தொழில்நுட்ப கூடாரங்கள் உடனடியாக சீரமைக்கப்பட்டு வருவதாகவும் செவ்வியில் தெளிவாக கோடிட்டுக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அமெரிக்கா மற்றும் உலகின் பல்வேறு நாடுகளிலும் பொருளாதார சிக்கல் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது. அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அரசியல் எதிர்காலம் மற்றும் உலகின் பல்வேறு நாடுகளில் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை தவிர்க்க வேண்டும் என்று அவர் போர் நிறுத்தம் ஒப்பந்தம் செய்து கொண்டு இந்த போரில் இருந்து விடுபட்டு விடலாம் என்று சர்வதேச வல்லுநர்கள் மற்றும் ராணுவ தலைவர்கள் உடனான அவசர ஆலோசனை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஈரான் 14 அம்ச கோரிக்கைகளை நிதானமாக கையாளும் நிலையில் அமெரிக்கா மிகப் பெரிய அளவில் ஆன பதட்டத்தை தன்னுள் கொட்டி தீர்த்து வருகிறது என்பதை யாதர்த்தமான நிலையாகும். ஈரான் இறுதி வரை தனது கொள்கையில் மாற்றம் செய்து கொள்ள தயாராக இல்லை என்பதே நிதர்சனமான நிலையாகும்.

மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் உள்ள 15 மேற்பட்ட நாடுகளில் உள்ள 228 தளங்கள் பற்றி எரிந்து நாசாமான காட்சி நியூயார்க் டைம்ஸ் நாளிதழில் படம் எடுக்கப்பட்டுள்ளது சேட்டிலைட் படங்களால் மூலம் இதுவரை அமெரிக்கா உலகின் மிகப்பெரிய பொய்யை அதாவது ராஜ பிம்பத்தை ஈரான் வரலாற்றில் முதல் முறையாக உடைத்து தள்ளி வல்லரசாக மாறிய உள்ளது.

இதனால் தான் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய நிலையில் போரில் இருந்து தற்காலிகமாக ஒய்வு நிலை அறிவித்து விட்டு தப்பிச் சென்றார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

அதே நேரத்தில் பஹ்ரைன் உள்ள அமெரிக்கா வின் 5 வது கடற்படை தளம் முழுவதும் காலி செயல்பட்டு விட்டதாக அமெரிக்கா ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகிறது. ஈரான் வீசிய ட்ரோன்கள் என்று அமெரிக்கா அலட்சியம் செய்தது எல்லா காலி என்று அமெரிக்கா ஊடகங்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்

பல்வேறு உண்மை தகவல்கள் செயற்கை கோள் படம் மூலம் எல்லாம் வெளியே வந்து விட்டது என்பதை அமெரிக்கா மறுக்க இயலாது ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது

ஈரான் ராணுவ தாக்குதலை சமாளிக்க முடியாமல் அமெரிக்கா வான் பாதுகாப்பு சாதனங்களான பேட்டி ரியாட்– தாட் சிஸ்டம் எல்லாம் காலி செய்யப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈரான் எங்குமே குறி தவறாமல் தாக்கி அழிக்கும் வகையில் அமெரிக்கா நிலைகளை தாக்கி அளித்துள்ளதாக அமெரிக்கா ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகிறது.

அமெரிக்கா வழங்கிய ஆவணம் ஈரானின் அணுசக்தி திட்டம், ஹோர்முஸ் நீரிணை மற்றும் பிராந்திய பதற்றங்கள் குறித்த விரிவான பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது.

இந்த முன்மொழிவை இரான் பரிசீலித்து வருவதாகவும், பாகிஸ்தான் மத்தியஸ்தர் கள் மூலம் தனது பதிலை பகிர்ந்து கொள்ளும் என்றும் இரானின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். ஆனால் சில மூத்த இரானிய அரசியல்வாதிகள் இதனை ஏற்கனவே பகிரங்கமாக நிராகரித்துள்ளனர்.




தாங்கள் தோற்றுக் கொண்டிருக்கும் ஒரு போரில் அமெரிக்கர்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை" என்று ஈரானிய நாடாளுமன்றத்தின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.இந்த முன்மொழிவை "அமெரிக்காவின் விருப்பப் பட்டியல்" என்று அவர் நிராகரித்துள்ளார்.

அதேநேரத்தில் ஈரான் தனது அணுசக்தி நடவடிக்கைகளின் பெரும் பகுதியை 20 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்க வேண்டும், அதிக செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் இருப்பை ஒப்படைக்க வேண்டும் மற்றும் விரிவான சர்வதேச ஆய்வுகளுக்கு அனுமதி அளிக்க வேண்டும். குறிப்பாக ஐ ஆர் ஜி சி வீரர்கள் மற்றும் ராணுவ தலைவர்கள் அமெரிக்க வை நம்ப மறுத்த நிலையில் அமெரிக்கா கொண்டு வரும் எந்தவொரு சமாதான ஒப்பந்தம் குறித்த அதிருப்தியை தெரிவித்து வருகின்றனர் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது..இந்த ஒப்பந்தத்தின்படி, ஹோர்முஸ் நீரிணையை முழுமையாக மீண்டும் திறப்பதற்கு இரான் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதற்குப் பதிலாக, அமெரிக்கா படிப்படியாகத் தடைகளை நீக்கி, முடக்கப்பட்ட இரானிய சொத்துகளை விடுவித்து, ஒப்பந்தக் காலம் முடிந்த பிறகு இரான் குறைந்த அளவில் யுரேனியம் செறிவூட்டலை மீண்டும் தொடங்க அனுமதிக்கக்கூடும்

ஈரான் எல்லா நிலைகளிலும் அனு சக்தி ஒப்பந்தத்தை தாமதிக்கும் நிலையில் வடிவம் பெற வேண்டும் என்று விரும்புகின்ற நிலையில் அமெரிக்கா தமது திட்டத்தை நிறைவேற்றி இஸ்ரேல் லுக்கு ஒரு நிரந்தர பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்க பாடுபட்டு வரும் நிலையில் இந்த ஒப்பந்தத்தை ஈரான் ஏற்று கொள்ள சற்று தாமதமாகலாம் என்று அதன் தரப்பில் கூறப்பட்டாலும் அமெரிக்கா புலி வாலை பிடித்த கதையாக முழுமையாக சிக்குண்டு காணப்படுகிறது.

உலகின் பல்வேறு நாடுகளில் மத்தியில் அமெரிக்கா தனது தோல்வியை ஒப்புக் கொள்ள மறுக்கும் அதே சமயம் எப்படியாவது வெற்றி பெற்றதாக ஓரு மாய பிம்பத்தை உருவாக்க முயற்சி செய்து வரும் நிலையில் அது தோல்வியை தான் தழுவி விட்டது.

மூன்றாம் நிலை போரான புராஜக்ட் ஃப்ரீ டம் போரைத் தொடர்ந்து அமெரிக்கா ஈரான் அதி வேக படகுகளையும் அதன் ஆற்றலையும் சக்தியையும் கண்டு பின்வாங்கி விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அமெரிக்கா 15000 க்கு மேற்பட்ட ராணுவ வீரர்கள் கொண்ட படையையும், 100 மேற்பட்ட போர் விமானங்கள் 20 மேற்பட்ட கப்பல்கள் ஹெர்மூஸ் ஜலசந்தி பகுதிக்கு அனுப்பி வைத்த நிலையில் அமெரிக்காவால் ஏதும் செய்ய இயலாத நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளது என்பதே யதார்த்தமான நிலையாகும்.

இந்த நிலையில் சீனா மற்றும் ரஷ்ய தொழில்நுட்ப சாதனங்களை தொடர்ந்து ஈரான் நாட்டிற்கு சப்ளை செய்து அதனைத் பாதுகாத்து வருவது என்பதை அமெரிக்கா நன்கு உணர்ந்து கொண்ட அதேநேரத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈரானிடம் எண்ணெய் வாங்கியதற்காக ஐந்து நிறுவனங்கள் மீது அமெரிக்கா விதித்தத் தடைகளுக்கு சீனா இணங்காது என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

சீன வர்த்தகத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்காவின் தடை நடவடிக்கைகளை அங்கீகரிக்கவும் இணங்கவும் மாட்டோம் என்று தெரிவித்துள்ளனர்.

"சீன நிறுவனங்கள் 3-ஆம் நிலை நாடுகளுடன் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் அது சார்ந்த இயல்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தடை செய்யவும் கட்டுப்படுத்தவும் இத்தகைய நடவடிக்கைகள் முயல்கின்றன. மேலும் சர்வதேசச் சட்டங்கள் மற்றும் அடிப்படை நெறிமுறைகளையும் இவை மீறுகின்றன. ஐ.நா. சபையின் அங்கீகாரம் மற்றும் சர்வதேசச் சட்டங்களில் குறிப்பிடப்படாத ஒருதலைப்பட்சமானத் தடைகளை சீன அரசு தொடர்ந்து எதிர்த்து வருகின்றது" என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்கா தனது முதல் ஆபரேஷனுக்கு எபிக் ஃபியூரி' தீர்க்கமான முடிவுகளைத் தரத் தவறியதாலும், ஹோர்முஸ் நீரிணை யைத் திறக்க அமெரிக்கா தொடங்கி திடீரென முடிவுக்கு வந்த 'ஆபரேஷன் ஃப்ரீடத்தால்' வளைகுடா அரபு நாடுகளை இந்த மோதலுக்குள் இழுக்கப்படும் அபாயம் இருந்ததாலும், அமெரிக்கா போரை நிறுத்தியதாக அவர்கள் நம்புகிறார் கள்.அந்தப் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகளை ஈரான் இலக்காகக் கொண்ட போதிலும், இந்த நாடுகள் எதுவும் அதிகாரப்பூர்வமாகப் போரில் நேரடியாக ஈடுபடவில்லை.

இரானிய நாடாளுமன்ற சபாநாயகரும் தலைமைப் பேச்சுவார்த்தையாளருமான முகமது பாகர் காலிபாப், "தற்போதைய நிலை நீடிப்பது அமெரிக்காவால் தாங்க முடியாதது என்பதை நாங்கள் நன்கு அறிவோம், ஆனால் நாங்கள் இன்னும் எதையும் தொடங்கவே இல்லை"என சமீபத்தில் பதிவு செய்திருந்தார்.இரானின் தலைமைக்கு, ஆட்சியில் நீடிப்பதே ஒரு வெற்றியாகக் கருதப்படுகிறது, குறிப்பாக அந்தப் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மற்றும் சிவில் உள்கட்டமைப்பு களுக்கும், இஸ்ரேலுக்கும் ஏற்பட்ட சேதங்களை ஈரான் சுட்டிக்காட்டுகிறது.

அதனால் தான், மற்றொரு சுற்று போரைத் தவிர்க்க ஈரான் தீவிரமாக விரும்புவதாகத் தெரியவில்லை. பொருளாதார சுமை , இராணுவ அழுத்தம் மற்றும் நீண்ட கால மோதல்களைத் தாங்கும் திறன் தங்களது எதிரிகளை விடத் தங்களுக்கு அதிகம் இருப்பதாக இரானிய அதிகாரிகள் நம்புகின்றனர். அதே நேரத்தில் ஈரான் நாட்டின் இரண்டு கருத்து கொண்ட செயல்பாட்டை கொண்ட அரசியல் பிரிவுகள் இருந்த போதிலும் கடும் போக்கு கொண்டவர்கள் கையில் தான் அதிகாரம் இருப்பதை உறுதி செய்ய முடிகிறது.

அமெரிக்கா எப்படியாவது இந்த போரில் தீர்வு காண வேண்டும் என்று விரும்பும் நிலையில் பல்வேறு நிலைகளில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மிரட்டல் விடுத்த நிலையில் இந்த பிரச்சனைக்கு நிரந்தர பாதுகாப்பு அம்சமாக இருக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் மத்திய கிழக்கில் உள்ள சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் இனியும் போர் தொடரும் நிலையில் தங்கள் நாடுகளில் மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் உறுதியாக நம்பும் அதே சமயம் ஐக்கிய அரபு அமீரகம் தங்கள் வருங்கால கூட்டணியாக இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தான் என்பதை வெளிப் படையாக அறிவிப்பு செய்துள்ளது ஈரானை மிகவும் ஆத்திரமூட்டும் நடவடிக்கையாக அமையும் என்று நம்பப்படுகிறது.இந்த நிலையில் ஈரான் உச்ச பட்ச தலைவர் மொஜ்தபா கொமேனி ரகசியமாக அரசு பிரதிகளுடன் இணைந்து செயல்திட்டங்களை வகுத்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அதேநேரத்தில் மொஜ்தபா கொமேனி தங்கும் இடம் மிகவும் ரகசியமாக இருக்கும் அதேநேரத்தில் பொதுவான அதிகார மட்டத்தில் அவர் செயல்படவில்லை என்றும் முஹம்மது பங்கர் கலிபாப் தினமும் ஈரான் அரசு நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் செயல்படுவதாக நம்பப்படுகிறது.

அமெரிக்காவுடன் இணைந்து செயல்பட மத்திய கிழக்கில் உள்ள பெரும்பாலான நாடுகளில் தயக்கம் தொடங்கி விட்டதை உணர்ந்து கொண்ட ஈரான் அதேற்கேற்ப தனது செயல்பாடுகளை வடிவமைக்கப் பட்டுள்ளதால் இன்னும் பல மாதங்களுக்கு அவர்கள் நின்று நிலைத்து போர வலிமை பெற்றுள்ளது என்பதை அமெரிக்கா உளவு அமைப்பு உறுதி செய்து உள்ளது.

ஆனால் அதேநேரத்தில் அரபு நாடுகள் கூட்டமைப்பு இந்த போரின் தன்மை வலுவிழக்க வேண்டும் என்று விரும்பும் நேரத்தில் பூனைக்கு மணி காட்டுவது யார் என்பதை புரிந்து அதற்கேற்ப காய்களை நகர்த்த வேண்டிய தருணத்தில் அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பது மிகவும் மோசமான ஒன்றாகும்.

## மனநலமும் ஆலோசனையும் 99

# வீணடிக்கப்படும் நேரம்

ஒருவன் வாழ்க்கையில் "வீணடிக்கும் நேரங்கள்" என்பது வெறும் மணிநேர இழப்பு அல்ல அது வாய்ப்புகள், அறிவு, ஆரோக்கியம், ஆன்மிக வளர்ச்சி, உறவுகள் ஆகியவற்றின் இழப்பாக மாறிவிடுகிறது.
வீணடிக்கப்படும் நேரங்களில் அதிகாலை நேரம்,
சூரிய உதய நேரம் என்பன மிக முக்கியமான நேரங்களாகும். இந்த நேரங்கள் சுமந்து வரும் அருள்களை பலர் இழந்துவிடுவதுண்டு.
இந்த நேரங்கள் மிகவும் ஆசீர்வதிக்கப் பட்ட, பலன்கள் பல நிறைந்த தரக்கூடிய நேரங்களாகும்.



**1. அதிகாலை நேரம்**
அதிகாலை என்பது:
* மனம் தெளிவாக இருக்கும் நேரம்
* துஆ ஏற்றுக்கொள்ளப்படும் நேரம்
* அறிவு உறையும் நேரம்
* திட்டமிட சிறந்த நேரம்

**இதை வீணடித்தால்:**
* நாளின் பரக்கத் குறையும்
* சோம்பேறித்தனம் அதிகரிக்கும்
* இலக்குகள் தள்ளிப்போகும்
* தொழுகை மற்றும் ஆன்மிக உணர்வு பலவீனமாகும்
* உடல் சுறுசுறுப்பு குறையும்

**2. "சூரிய உதய நேரம்"**
இந்த நேரம் சிந்தனைக்கும், திக்ருக்கும், கற்றலுக்கும் உகந்த நேரம்.

**இந்த நேரம் வீணடிக்கப்பட்டால்...**
* மன அமைதி குறையும்
* நாள் முழுக்க குழப்பம் இருக்கும்
* கவனக்குறைவு உருவாகும்

**3. இளமை நேரம்.**
இளமை என்பது சக்தி, ஆர்வம், சுற்றுப்புற, தேடல், நினைவாற்றல் நிறைந்த காலம்.

**இந்த நேரம் வீணடிக்கப்பட்டால்...**

* முதுமையை அடையும்போது.... "அப்போது செய்திருக்கலாம்" என்ற வருத்தம் வரும்
* திறமைகள் புதைந்து போகும்.
* வாழ்க்கை முன்னேற்றம் தாமதமாகும்

**4. உடல் நலமாக இருக்கும் நேரம்.**
நோய் வருவதற்கு முன் ஆரோக்கியம் மிகப்பெரிய பெரிய அருளாகும்.

**இந்த நேரம் வீணடிக்கப்பட்டால்...**
* நினைத்த காரியங்கள் செய்ய முடியா-மல் போனது என்ற வருத்தம் ஏற்படும்.
* உடல் பலவீனம் காரணமாக மன-அழுத்தம் உருவாகும்.
* குற்ற உணர்வு அவதிப்படுத்தும்.

**5. ஓய்வு நேரங்கள்**
சிலர் கிடைக்கும் சிறிய ஓய்வு நேரங்களை வீணடிப்பதை காண்கிறோம்.
முடிவில்லா மொபைலில்..
பயனற்ற வீடியோக்களில்...
அர்த்தமற்ற பேச்சுகளில்..
நேரத்தை கழித்துவிடுகிறார்கள்.

**இந்த நேரம் வீணடிக்கப்பட்டால்...**
* கவனம் சிதறும்
* அறிவு வளர்ச்சி நின்றுவிடும்
* நேர கட்டுப்பாடு குலையும்

6. குடும்பத்துடன் இருக்கும் நேரம்

பெற்றோர், மனைவி, சகோதர - சகோ-தரிகளுடன், பிள்ளைகளுடன் குடும்பமாக செலவிட வேண்டிய நேரம் பலரால் வீணடிக்கப்படுகிறது.

**இந்த நேரம் வீணடிக்கப்பட்டால்...**
* உறவுகள் தூரமாகும்
* பாசம் குறையும்

போகும்.
* பிறர்மீது சார்ந்த வாழ்க்கை உருவாகும்

* அன்பை எங்கோ தேடவேண்டி வரும் பின்னர் நினைவுகளே இல்லாமல் போகும்.

**7. அறிவைப் பெறக்கூடிய நேரம்**
கற்றுக்கொள்ள முடிந்த நேரத்தில் கற்றுக்கொள்ளாமல் இருப்பது பெரிய இழப்பாகும்.

**இந்த நேரம் வீணடிக்கப்பட்டால்...**
* அறியாமை தொடரும்
* நல்ல முடிவுகள் எடுக்க முடியாது

**8. அல்லாஹ்வை நினைக்காமல் கழியும் நேரம்.**

இந்த நேரம் திக்ர், துஆ, குர்ஆன், தொழுகை போன்ற வணக்க வழிபாடுகளில் இருந்து விலகியிருக்கும் நேரமாகும்.

**இந்த நேரம் வீணடிக்கப்பட்டால்...**
* இதயம் கடினமாகும்
* உள்ளமைதி குறையும்
* பாவங்களில் விழுவது எளிதாகும்
ஒரு மனிதனின் மிகப் பெரிய நஷ்டம் நேரத்தை இழப்பது அல்ல
"நேரத்தின் மதிப்பை உணராமல் வாழ்வது"
பணத்தை மீண்டும் சம்பாதிக்கலாம்.
உடமைகளை மீண்டும் பெறலாம்.
ஆனால் சென்ற நேரத்தை மீண்டும் கொண்டு வர முடியாது.
"நாளை செய்வேன்" என்று சொல்லும் மனிதன், பல நேரங்களில் "ஒருநாளும் செய்யாமல்" விட்டுவிடுவான்.
அதனால்:
ஒவ்வொரு நாளுக்கும் நோக்கம் இருக்க வேண்டும்.
ஒவ்வொரு நேரத்துக்கும் பயன் இருக்க வேண்டும்.
சிறிய நேரங்களையும் அர்த்தமுள்ள செயல்களால் நிரப்ப வேண்டும்.
அப்போதுதான்
மனதில் அமைதி கிடைக்கும்.
வாழ்க்கையில் அருள் செழிக்கும்.
வாழ்க்கையை வாழ்ந்ததாக ஆகும்.



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---

## சாய்ந்தமருதில் பலவீதிகளின் அபிவிருத்திப் பணிகள் ஆதம்பாவா எம்.பி.யினால் ஆரம்பித்து வைப்பு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கிராமிய வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிராமிய வீதிகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு திங்கட்கிழமை (11) இடம்பெற்றது.
சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு, அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும் இலங்கை அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா அவர்களின் பங்கேற்புடனும் நடைபெற்றது.
இதன் போது சாய்ந்தமருது தண்டயல் வீதி, பலாஹ் பள்ளி வீதி, தோணா ஈஸ்ட் (நுயளவ) வீதி, போக்கடி குறுக்கு வீதி ஆகிய வீதிகளுக்கான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.
இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், பிரஜா சக்தி தவிசாளர்கள், உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.
மக்களின் நீண்டகால கோரிக்கைகளில் ஒன்றான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இவ்வாறான அபிவிருத்தித்திட்டங்கள், பிரதேசத்தின் முன்னேற்றத்திற்கும் மக்கள் நலனுக்கும் பெரும் பங்களிப்பாக அமையும் எனவும் மக்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

---

## சீனன்கோட்டை பாஸிய்யாவில் இடம்பெற்ற மனாகிப் மஜ்லிஸ்






(பேருவளை பீ.எம். முக்தார்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் 135ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபம் 09ஆம் திகதி (09.05.2026) சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.
தமாம் மஜ்லிஸில் சீனன் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர் கலீபத்துஷ் ஷாதுலி அஷ் ஷெய்க் அல்ஹாஜ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) விஷேட சொற்பொழிவாற்றினார்.
சாதுலியா தரீக்காவின் ஸ்தாபகர் ஆத்மீக ஞானி அல் குத்புல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலிய்யுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 860வது ஜனன தினத்தை முன்னிட்டும் ஆத்மீக ஞானி அல்குத்பு அல் முஹம்மதிப்னு முஹம்மத் அல்பாஸி அஷ் ஷாதுலி (ரலி) அவர்களினதும் ஷாதுலிய்யா மஷாஹிர்மார்களின் ஞாபகர்த்தமாகவும் சீனன் கோட்டை பள்ளிச் சங்கம் 135 ஆவது வருடமாக இந்த மஜ்லிஸை ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.
சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியாரின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்ற இம்மஜ்லிஸில் கலீபாக்கள் உலமாக்கள் சீனன்கோட்டை பள்ளிச்சங்க உறுப்பினர்கள் மற்றும் முகத்தமீன்கள் இஹ்வான்கள் பங்குபற்றினர்.

எம்.எஸ்.எம்.ஸாகிர்

# சாய்ந்தமருது நகர சபைக்கு வலுவூட்டிய நவம்பர் எழுச்சிப் பிரகடனம்



**சாய்ந்தமருதுருக்கான நகரசபை வர்த்தமானி சட்டபூர்வமானது என்ற வரலாற்று தீர்ப்பின் மூலம் அங்கு தோற்றம் பெற்றுள்ள அரசியல் நகர்வு பற்றி சாய்ந்தமருதின் கல்விப் பொக்கிஷம், முன்னாள் கல்முனை சாஹிரா கல்லூரியின் அதிபரும் முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் பிரபல சிரேஷ்ட எழுத்தாளருமான ஏ.பீர்முஹம்மட் அவர்களுடனான நேர்காணல்**

கடந்த 7 ஆம் திகதி நீதிமன்றத்தின் ஊடாக சாய்ந்தமருதுக்கான நகர சபை வர்த்தமானி சட்ட பூர்வமானது என்ற தீர்ப்பு வெளியாகி உள்ளது. இது பற்றி தாங்கள் அறிவீர்கள். இந்த நீதிமன்றத் தீர்ப்பின் தொடர்ச்சியாக கல்முனைப் பிரதேசத்தில் குறிப்பாக சாய்ந்தமருதில் தோற்றம் பெற்றுள்ள அரசியல் நகர்வுகள் தொடர்பில் பல கேள்விகள் உள்ளன. அது பற்றி கலந்துரையாடலாம் என்ற நோக்கத்தையே இந்த நேர்காணல் மையம் கொண்டுள்ளது. எனது முதலாவது கேள்வியை இப்பொழுது முன்வைக்கிறேன்.

**கேள்வி:** சாய்ந்தமருது நகர சபை தொடர்பான கோரிக்கைகளின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி சிறிய குறிப்பொன்றைத் தரமுடியுமா?

**பதில்:** சாய்ந்தமருது என்பது கீர்த்தியும் பெருமையும் மிக்க ஒரு பழம் பெரும் பிரதேசமாகும்.

முதன் முதலாக கடல் வழியாக 1602.06.31 இல் இலங்கைக்கு வருகை தந்த ஒல்லாந்த குழுவினர் அதன் தளபதி ஜொரிஸ் வான் ஸ்பில் பேர்கன் தலைமையில் சாய்ந்தமருதில் காலடி வைத்ததாக ஒரு வரலாற்றுத் தகவல் உள்ளது. இதனை கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள ஒல்லாந்து நூதன சாலையில் உள்ள ஓர் ஆவணம் ருசிப்படுத்துகின்றது.

ஆங்கிலேயே குடியேற்ற செயலாளரினால் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் சாய்ந்தமருது 1897.03.01இல் தொடங்கி சனிட்டரி சபையாக இயங்கத் தொடங்கியது.

பின் வந்த காலத்தில் கரவாகு தெற்கு கிராமசபை என்ற பெயரில் 1928 இல் ஒரு கிராமசபை உருவாக்கப்பட்டு பத்து வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு இருந்தன.

1936 இல் உள்ளூராட்சி நிருவாகம் இயங்கத் தொடங்கியது. உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். கரவாகு தெற்கு கிராம சபையின் முதலாவது தலைவராக அப்துல் லத்தீப் காரியப்பர் செயற்பட்டார்.

மொத்தமாக ஏழு உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெற்றதாகத் தெரிய வருகிறது.

எனது தந்தை ஐ. அலியார் கரவாகு தெற்கு கிராம சபையில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் உறுப்பினராக இருந்தவர். அவரிடம் இருந்த ஆவணங்களில் ஆறுமுகம் ஆச்சாரி, கார்த்திகேயன் சாஸ்த்திரி, கொல்லன் சீனி, காளிக்குட்டி மற்றும் தம்பியப்பா போன்ற தமிழர்களின் பெயர்கள் உட்படகாலத்துக்குக் காலம் உறுப்பினராக இருந்த பல முஸ்லிம் உள்ளூர் அரசியல் பிரமுகர்களின் பெயர்ப் பட்டியலை நான் வாசித்திருக்கிறேன்.

1972 இல் நாடு முழுவதும் இருந்த உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு விசேட ஆணையாளர்கள் நியமிக்கப் பட்டனர் . தபாலதிபராக இருந்த எம்.சி. ஆதம்பாவா என்பவர் சாய்ந்தமருது தெற்கு கிராம சபையின் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

நாடு முழுவதும் மாநகர சபை, நகர சபை, பட்டின சபை, கிராம சபை என நான்கு உள்ளூராட்சிப் பிரிவு அமைப்புகள் இயங்கி வந்தன.

ஜனாதிபதி ஆர். பிரேமதாச ஆட்சிக் காலத்தில் பட்டின சபை, கிராம சபை ஆகிய இரு உள்ளூராட்சிப் பிரிவுகளையும் ஒரு சேர இணைத்து பிரதேச சபையாக மாற்றம் செய்தார்.

ஒரு பிரதேச செயலகத்திற்கு ஒரு பிரதேச சபை



என்ற அடிப்படையில் சாய்ந்தமருது ஏற்கனவே கல்முனை பிரதேச செயலகத்தின் கீழ் இருந்த காரணத்தினால் கல்முனை பிரதேச சபையில் சாய்ந்தமருது உள்வாங்கப்பட்டது.

நீண்ட காலமாக சாய்ந்தமருது தனியான உள்ளூராட்சி அலகாக இருந்து வந்தது. பிரேமதாசவின் இத்திட்டத்தின் மூலம் சாய்ந்தமருது தனது தனித்துவத் தலைமையை இழந்தது. மக்களிடையே அதிருப்தி உருவானது.

அப்போது அமைச்சராக இருந்த ஏ.ஆர். மன்சூர் அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு இதனைச் செய்தார் என்று வீணான செய்திகளை சிலர் பரப்பினார்கள். உண்மை அதுவல்ல, நாடு முழுவதும் ஏற்பட்ட நிர்வாக ரீதியான மாற்றங்களின் அடிப்படையிலேயே சாய்ந்தமருது தெற்கு கிராம சபை கல்முனை பிரதேச சபையில் உள்வாங்கப்பட்டது. 1988 இல் சாய்ந்தமருதுக்கான கோஷம் விதைக்கப்பட்டது.

இது தொடர்பாக பல குழுக்கள் சந்திப்புகளை நடத்தின. இளைஞர் வட்டங்கள் போன்றன கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தன.

எனவே, 1988 இல் சாய்ந்தமருது மக்கள் தமக்கு தனியான உள்ளூராட்சி சபை ஒன்றைத் தேடத் தொடங்கினர்.

இதுவே சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபையைக் கோரிக்கையின் வரலாற்றுத் தொடக்கமாகும்.

**கேள்வி:** சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபை ஒன்றுக்கான கோரிக்கைகள் எந்த வடிவில் யாரால் முன் வைக்கப்பட்டன என்று கூற முடியுமா?

**பதில்:** இக்கோரிக்கை பற்றி சிந்தித்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து 'சாய்ந்தமருது மறுமலர்ச்சி இயக்கம்' என்ற பெயரில் இக் கோரிக்கையை முன்னெடுத்தனர். பல சந்திப்புகளை மேற்கொண்டனர். ஒன்றிரண்டு கூட்டங்களில் நான் கூடக் கலந்து கொண்டது ஞாபகமிருக்கிறது.

அதேபோன்று 'சாய்ந்தமருது நலன்புரி ஒன்றியமும்' தீவிரமாக இந்த விடயத்தில் செயற்பட்டது.

சாய்ந்தமருது சூரா சபை தனியானதொரு சபை கிடைக்காத பட்சத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் சுயேட்சை குழுவில் போட்டி யிடுவதற்கான பிரேரணையினை முன் வைத்தது. அந்த அடிப்படையில் தேர்தலில் தேனீர்க்கோப்பை சின்னத்தில் போட்டியிடவும் செய்தனர்.

பல தரப்பினரும் இளைஞர் அமைப்புகளும் பொது நல அமைப்புகளும் சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலும் அதன் தலைமைகளும் அரசியல்வாதிகளிடமும் அமைச்சர்களிடமும் அரசாங்கத்திடமும் பல திசைகளிலும் தனிச் சபை ஒன்றுக்கான கோரிக்கைகளை முன்னெடுத்துச் சென்ற வண்ணமே இருந்தனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களும் கட்சியின் இன்றைய தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களும் 1999 ஏப்ரல் மாதத்தில் பாராளுமன்றத்தில் பேசும்போது சாய்ந்தமருதுக்கு தனியானதொரு ஆட்சி சபை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

சாய்ந்தமருதில் 2016.10.22 இல் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவர் றிஷாத் பதியுதீன் அவர்களின் அழைப்பின் பேரில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா அவர்கள் கலந்து கொண்டார். சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபையினை எப்படியும் வழங்குவேன் என்று வாக்குறுதி அளித்துச் சென்றார்.

தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் அவர்கள் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சராக இருந்தபோதும் ஏனைய அமைச்சுப் பதவிகளில் இருந்த வேளையிலும் எல்லாக் காலத்திலும் சாய்ந்தமருதுக்கான தனியான சபைக் கோரிக்கை தொடர்பில் பல நடவடிக்கைகள் எடுத்தார்.

எவராலும் சபையைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. எந்தவொரு கோரிக்கையும் கைகூடாத இந்த நிலையில் சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜு/ம்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை அதன் தலைவர் வை.எம். ஹனீபா அவர்கள் தலைமையில் தனியான சபை கோரிக்கையை தீவிரமாக கையில் எடுக்கத் தீர்மானித்தது.

அதுவே 'சாய்ந்தமருதுக்கான நவம்பர் எழுச்சி' என்று அழைக்கப்பட்டது.

சாய்ந்தமருதிற்கான தனியான நகர சபை பிரகடனம் 2017 நவம்பர் 01 இல் பெரும் திரளான மக்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

**கேள்வி:** சாய்ந்தமருதுக்கான நகர சபை பிரகடனத்தின் உள்ளடக்கம் பற்றி சிறிது தெளிவுபடுத்த முடியுமா?

**பதில்:**

முதலில் இவ்வாறானதொரு பிரகடனத்தின் தேவையை விளங்கிக் கொள்வது அவசியமாகும். ஏற்கனவே சொன்னதைப்போல சாய்ந்தமருத்துக்கான ஒரு தனியான நகர சபையின் தேவையை எல்லோருமே ஏற்றுக் கொண்டார்கள். முஸ்லிம் அரசியல் தலைவர்களும் முஸ்லிம் தலைமைகளும் ஏன் தமிழ், சிங்கள பிரதிநிதிகளும் கூட இந்த கோரிக்கை நியாயமானது என்று ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், எவரும் அதைப் பெற்றுத்தர முன்வரவில்லை. பல வகையான போராட்ட வடிவங்களைத்தான் மேலே உள்ள கேள்விகளில் பதிலாக நான் தந்திருக்கிறேன். எதுவும் கை கூடாத நிலையில் இவ்வாறான பிரகடனத்தைச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.

இந்தப் பிரகடனம் தொடர்பில் 2017.11.12 சுடரொளி பத்திரிகையில் நான் எழுதிய கட்டுரையை இங்கு அவ்வாறே தருவது பயனளிக்கும் என்று நினைக்கிறேன். இப்பிரகடனம் சாய்ந்தமருதின் அரசியலலைப் பேசுகின்றது.

இப்பிரதேசத்தின் எல்லைக்குள் எந்த ஒரு கட்சியினதும் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆதரவு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்றும் கட்சி அலுவலகங்கள் இயங்க இடமளிக்கக்கூடாது என்றும் பிரகடனம் கூறியது.

குறிப்பிட்ட எல்லைக்குள் இடம்பெறும் எந்தவொரு நிகழ்வுக்கும் கட்சி சார்ந்த உள்ளூர் அரசியல் வாதிகளை அழைக்கக் கூடாது என்றும் பிரகடனத்தில் உள்ளது.

அத்துடன் சாய்ந்தமருது தனியான உள்ளூராட்சி சபை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் வரை எதிர்நோக்கும் எந்தவொரு தேர்தலிலும் பள்ளி வாயல் பரிபாலன சபையின் நெறிப்படுத்தலில் சுயேட்சைக் குழுக்கள் வேட்பாளர்களாக களம் இறக்கப்படுவார்கள் என்றும் பிரகடனப்படுத்தியுள்ளது.

இவற்றிற்கும் அப்பால் பிரகடனத்தை மீறும் எவரும் பள்ளிவாயல் கட்டுப்பாட்டை மீறியதாக கருதப்படுவதுடன் துரோகிகளாக முத்திரை குத்தப்படுவர் என்று எச்சரிக்கையும் செய்தது. இவ்வாறு அந்த பிரகடனம் பேசுகின்றது.

தேர்தலின்போது சுயேட்சையாக போட்டியிடுதல் பற்றிய விடயத்தில் மக்கள் பெரும் ஆதரவு தெரிவித்தனர். ஆனால், ஊரில் நடைபெறும் பொது நிகழ்வுகளுக்கு அரசியல்வாதிகளை அழைக்காமல் இருப்பதற்கும் அரசியல் நடவடிக்கைகளுக்கு தடைவிதித்தமையும் விமர்சனத்துக் குள்ளானது. அது அரசியல் சுதந்திரத்தை மறுக்கிறது என்று வாதிட்டனர். எனினும், பொது மக்கள் எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். மனதார ஆதரவளித்தார்கள். வாக்குகளும் அளித்தார்கள்.

**கேள்வி:** உள்ளூராட்சித் தேர்தலில் சுயேட்சை குழுக்கள் போட்டியிட்டது தொடர்பாக தகவல் தாருங்கள்?

**பதில்:** கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் குறிப்பாக, சாய்ந்தமருதின் ஆறு வட்டாரங்களுக்கும் ஆறு பேர் சுயேட்சைக் குழு வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

ஆறு வட்டாரங்களுக்கும் நியமிக்கப்பட்ட சுயேட்சை குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்த முறை பற்றி மக்களிடையே பலவிதமான கருத்துக்கள் நிலவின. போராட்டத்தில் ஒரு நாள் கூட பங்கு பெறாதவர்களுக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்பட்டது.

சாய்ந்தமருது பிரதேசத்தின் குறிப்பிட்ட வட்டார மக்கள் நேரடியாக வந்து தங்களுடைய வட்டாரத்துக்கு நியமிக்கக் கோரியவர்களின் பெயர்களை நிராகரித்து தங்களுக்கு வேண்டிய வர்களுக்கு நியமனம் விற்கப்பட்டதாக பெரும் கதை அடிபட்டது. ஊழலுக்கு எதிராக பேசுபவர்களை மற்றும் கல்விப் புலம் உள்ளவர்களை வேண்டுமென்றே நிராகரித்தார்கள்.

எனினும், பள்ளிவாசல் சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் என்ற வகையில் அவர்களை மக்கள் அமோகமாக ஆதரித்து பெரும் எண்ணிக்கை வாக்குகளை செலுத்தி அவர்களை வெற்றி பெறச் செய்தார்கள்.

சாய்ந்தமருது வட்டாரத்தில் அமைந்த ஆறு வட்டாரங்களில் இருந்து ஆறு பேரும் விகிதாசார அடிப்படையில் மூன்று பேருமாக மொத்தம் ஒன்பது பேர் கல்முனை மாநகர சபையின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

கல்முனை மாநகர ஆட்சியில் சாய்ந்தமருது உறுப்பினர்கள் தங்களின் பணியை சாய்ந்தமருது நகரசபை எழுச்சி கோஷத்தின் அடிப்படையில் சிறப்பாகப் பணி செய்தார்களா? என்பதைப் பற்றி இங்கு பேசப்படுவதில் அர்த்தம் இல்லை. அது பற்றி பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் பேசலாம்.

**கேள்வி:** சாய்ந்தமருதுக்கான நகரசபைத் தேர்தல் விரைவில் நடைபெறலாம் என்று ஒரு எதிர்பார்ப்பில் உத்தேச நகரசபையின் இருப்பு எவ்வாறு அமையும்?

**பதில்:** சாய்ந்தமருது நகர சபைக்கான நீதிமன்ற தீர்ப்பில் எல்லை வகுப்பு தொடர்பாகவும் கூறப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது நகரசபை, கல்முனை மாநகர சபை போன்றவற்றிற்கான எல்லைகளை வகுக்கும் குழு நியமித்தல், உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல், அவற்றிற்கான வட்டாரங்களை பிரிவெடுத்தல், பெயரிடுதல், இலக்கமிடுதல் போன்ற செயற்பாடுகள் இடம் பெற வேண்டியுள்ளது.

எல்லை நிர்ணயக் குழு நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அறிக்கையை உரிய அதிகாரி களுக்கு சமர்ப்பி-க்கப்பட வேண்டும்.

அது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிடுவார்.

பின்னர் தேர்தலுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டும்.

ஒன்பது அல்லது பத்து வட்டாரங்களும் விதிதாசார அடிப்படையிலான உறுப்பினர்களையும் சேர்த்து பன்னிரெண்டு அல்லது பதின்மூன்று உறுப்பினர்கள் நகரசபைக்குத் தெரிவு செய்ய




வாய்ப்பு கிடைக்கலாம் என்று நினைக்கிறேன்.

இத்தனை விடயங்களும் நிறைவேறிய பின்னரே சாய்ந்தமருதுக்கான தேர்தல் இடம் பெறும்.

இங்கே ஒரு விடயம் சந்தேகமாக தொக்கி நிற்கின்றது.

எல்லைகள் தீர்மானிக்கப்பட்டு அனைத்து நிர்வாக வேலைகளும் முடிந்த பிற்பாடு உடனடியாக தேர்தல் ஒன்றுக்கான அழைப்பு விடுக்கப்படுமா? அல்லது நாடு முழுவதுமான உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் பொழுதுதான் கல்முனை மாநகர சபைக்கும் சாய்ந்தமருது நகர சபைக்குமான தேர்தல் இடம் பெறுமா? என்பது பற்றி இப்போதைக்கு எதுவும் தெளிவில்லாமல் இருக்கிறது.

தேசிய அளவிலான உள்ளூராட்சி தேர்தல் நடைபெறும் பொழுதே சாய்ந்தமருதுகான நகர சபை தேர்தலும் இடம் பெறலாம் என்று பெரிதும் ஊகிக்கப்படுகிறது.

அல்லாமல் நகரசபைக்கான தனித் தேர்தல் 2027 ஜனவரியில் இடம் பெற வாய்ப்புள்ளது.

சற்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி:** எப்படியோ தேர்தல் என்று வந்தால் சாய்ந்தமருது நகர சபைக்கான தேர்தல் களம் எவ்வாறு அமையலாம் ? உங்கள் கணிப்பைச் சொல்லுங்கள்?

**பதில்:** ஆம்! நல்ல கேள்வி. ஆனால், தேவையான கேள்வி என்று நினைக்கிறேன்.

சாய்ந்தமருது நகரசபைத் தேர்தலில் மல்லுக்கட்ட அரசியல் கட்சிகள் இப்போதே தயாராகிவிட்டன. என்னைப் பொறுத்தவரையில் நான்கு கட்சிகள் இந்தத் தேர்தலில் கட்டாயம் போட்டியிடும் என்று நினைக்கிறேன்.

தேசிய மக்கள் சக்தி (NPP), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC)' ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC), தேசிய காங்கிரஸ் (N) என்பனவே அக்கட்சிகள். சுயேச்சை குழு ஒன்று போட்டியிடவும் வாய்ப்புகளும் உண்டு.

இவற்றிக் கிடையேதான் பலமான போட்டி ஷ நடைபெறும்.இவற்றைவிட ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ.ல.சு.க மற்றும் ஐ.தே.க என்பனவும் போட்டிக்குத் தயாராகும் நிலைமை காணப்படுகின்றது.

ஒன்றுக்கும் மேற்பட்ட சுயேட்சை குழுக்களும் போட்டிக்கு முன்வரலாம் என்று நான் ஊகிக்கிறேன். சில வேளைகளில் முக்கிய கட்சிகள் கூட்டணிகளாகும் வாய்ப்பும் உண்டு.

**கேள்வி:** இறுதியாக ஒரு கேள்வி. அது உங்களைப் பற்றியது. சாய்ந்தமருது நகரசபை போராட்டத்தின் ஆரம்ப கால கட்ட நடவடிக்கைகளில் நீங்கள் முழுமூச்சாக ஈடுபட்டு வந்ததாகவும் ஆனால், நீங்கள் ஒரு கட்டத்தில் ஒதுங்கியதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன. அது பற்றி கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள். இந்த நேர்காணலை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். அதுபற்றிச் சொல்லுங்கள்?

**பதில்:** ஆம்!

இந்தக் கேள்வியின் பதில்கள் இந்த நேர்காணலுக்கு வலுச் சேர்க்கும் என்று நினைக்கிறேன்.

அங்கு கிடைத்த தகவல்கள் பலவற்றை தான் இங்கே நான் சொல்லி இருக்கிறேன்.

நீங்கள் சொல்வது போல இந்த நகர சபைப் போராட்டத்தினுடைய முக்கிய ஆரம்ப நிகழ்வுகளில் ஒருவராக நான் இருந்ததும் இடையில் கொஞ்சம் தள்ளி இருந்ததும் உண்மைதான்.

விபரமாகச் சொல்கிறேன். இந்தப் போராட்டங்களில் நான் மிகவும் தீவிரமாக ஈடுபட்டேன். எல்லாச் செயற்பாடுகளிலும் பங்களிப்பை வழங்கினேன்.

பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதினேன். சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி சபை சாத்தியமா? (01.01.2017), அம்பாறை அரசியலை புரட்டி போடுமா சாய்ந்தமருது ஊராட்சி அலகு (20.08.2017),

கட்சி அரசியலைப் புரட்டிப் போடுமா சாய்ந்தமருது தனி அலகு கோரிக்கை (05.11.2017), சாய்ந்துமருது பிரகடனமும் நவம்பர் புரட்சியும் (12.11.2017) போன்ற கட்டுரைகளை எழுதினேன்.

சுடரொளி பத்திரிகையில் இக்கட்டுரைகள் வெளியாகின. இவற்றின் ஊடாக சாய்ந்தமருதுக்கான தனியான நகரசபைக்கு ஆதரவு வழங்கும் கட்டுரைகளாக அவை அமைந்தன.

ஏற்பாடு செய்யப்பட்ட ஒவ்வொரு கூட்டத்திலும் பேசினேன். மக்களுக்கு தெளிவாக கருத்துக்களை வெளியிட்டேன்.

2017 ஒக்டோபர் 01 இல் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கூட்டத்திலும் உரையாற்றினேன். இக்கூட்டத்தில் பேசியமைக்காக கல்முனை பொலிஸ் என்னுடன் சேர்த்து மொத்தமாக ஆறு பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர். ஏழு வருடங்களின் பின்னரே நீதிமன்றத்தில் இருந்து விடுதலை பெற்றேன்.

நான் என்னாலான பங்களிப்பை நவம்பர் புரட்சிக்கு கொடுத்தேன். ஆனாலும், அவர்களில் இருந்து சற்று விலகி இருந்தமைக்கு காரணம் உண்டு. ஏற்கனவே கல்முனை மாநகர சபையில் முதல்வரின் ஆலோசகராக நான் கடமை ஆற்றிய அனுபவத்தைக் கொண்டு சுயேச்சைக் குழுவில் ஒருவராக போட்டியில் கலந்து கொள்ள நான் விண்ணப்பம் கொடுத்திருந்தேன். எனினும், ஊழலுக்கு எதிரான எனது போக்கும் ஓய்வின்றிச் செயலாற்றும் எனது இயல்பும் சிலருக்கு பிடிக்கவில்லை.சிலருக்கு உழைக்க வேண்டிய தேவையும் இருந்தது. அதனால் எனக்கு சுயேட்சைக் குழுவில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதன் காரணமாக நான் சற்று தள்ளி இருக்க விரும்பினேன். எனினும், தேர்தலுக்கான வேட்பாளர் நியமனம் தாக்கல் செய்ய அம்பாறை செயலகத்துக்குச் சென்றபோது நானும் அவர்களுடன் சென்றேன்.

என்னுடைய எதிர்ப்புகளை எந்த வகையிலும் நான் வெளிக்காட்ட வில்லை. மாறாக அவர்களுக்கு அமைதியான ஆதரவைத் தெரிவித்து வந்தேன்.

இதுதான் நான் நவம்பர் புரட்சியோடு நெருங்கி இருந்தமையும் விலகி இருந்தமைக்குமான பின்னணி ஆகும். இப்பொழுதெல்லாம் மருதூர் என்ற சொல்லை தங்களுடைய தலைகளில் சுமந்து திரிவதை நான் பார்க்கிறேன். ஆனால், மருதூரான் என்ற புனைப் பெயரில் நான் 1968 யிலையே கவிதைகளை எழுதி வந்தேன்.

தற்போதைய புதிய சாய்ந்தமருது நகரசபைக் களம் புதியது. புதிய காட்சிகள் தென்படத் தொடங்கியுள்ளன. வெற்றி பெறுவோம் என்று நினைப்பவர்கள் தோல்வி அடையவும் தோல்வி அடைவார்கள் என்ற எதிர்பார்த்தவர் வெற்றியடையவும் வாய்ப்புகள் உண்டு.

புதிய நகர சபைத் தேர்தலை ஆவலோடு காத்திருக்கிறேன். நன்றியும் வாழ்த்துகளும்!

# நாடு கடத்தப்பட்ட சொற்கள்




தமிழ்நதி அக்காவின் கட்டுரை தொகுப்பான 'நாடு கடத்தப்பட்ட சொற்களை' வாசித்துகொண்டிருக்கிறேன்.

மொத்தமாக 20 கட்டுரைகளை 284 பக்கங்கள் தாங்கி நிற்க முதல் 8 கட்டுரைகளும் 158 பக்கங்களில் அரசியல் பேசி இருக்கிறது. அதுவரையே வாசித்திருப்பினும் அதன் கனதி அதை பற்றி எழுத வைத்திருக்கிறது.

முதல் இரண்டு கட்டுரைகளும் அவரது சமகால எழுத்தின் வலிமையை கொண்டிருக்காவிடினும் எங்கள் வலிகளை உரத்து சொல்ல தவறவில்லை. அதன் பின் வரும் 6 கட்டுரைகளும் தகவல்களாலும் உசாத்துணை தேடல்களோடும் வாசகர்களின் அறிவுத் தேடலுக்கு விருந்தளிக்கிறது.

'நாடு கடத்தப்பட்ட சொற்கள் ' என்ற கட்டுரை புலம் வதியும் மக்களின் அவ்வாழ்வியல் நிர்ப்பந்தம் எவ்வாறு உருவானது, எம்மை போன்று துரத்தி அடிக்கப்பட்ட இனங்களின் அவலமும் கண்ணீரும் எத்தகையது, அவர்களது குரல் எவ்வாறு தனது தேசத்திற்காய் ஒலிக்கிறது, எம்மவர்களோ புலம்வதியும் மக்கள் எமக்காய் குரல் கொடுக்கும் போதெல்லாம் 'இவர்கள் அங்கே வசதியாக வாழ்ந்துகொண்டு நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள். யுத்தம் முடிந்துவிட்டது தானே... மண்ணை நேசித்தால் வரவேண்டியது தானே. எங்களை வைத்து அவர்கள் பிழைப்பு நடத்துகிறார்கள் ..... ' என்றெல்லாம் புலம்பி (2009 ற்கு பின் அதிகமாக) மிக இலக்குவாக பிரித்தாளும் தந்திரங்களுக்கு கட்டுப்பட்டு அவர்களை வேற்றவர்களாக பார்க்கும் மன நிலையை உடைதெறிகிறது. யூதர்கள் செய்யும் அட்டூழியங்களுக்கு அப்பால் இவ்விடயத்தில் அவர்களை உதாரணமாக கொள்ளும் பலரும் புலம்வதியும் 'ஈழத்தமிழர்களை ' மறுத்தலித்தே வருகின்றனர். இது எவ்வகையான உளவியல் என்ற கேள்வியை இந்த கட்டுரை எமக்கு உண்டாக்கும்.

5வது கட்டுரைகள் அரசினால் எங்களது ஊடக உரிமை எவ்வாறு நசுக்கப்பட்டது, சிங்கள, தமிழ் ஊடகவியலாளர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள், தேசம் கடந்து எவ்வாறு விரட்டி அடிக்கப்பட்டர்கள் சில ஊடகங்கள் எவ்வாறு விலை போயின ஆக்கிரமிக்கபட்டன என்பது குறித்த ஆழ்ந்த பார்வையை தந்திருப்பதோடு தரவுகள் தேடலை அதிகரித்திருக்கிறது.

6 வதில் சர்வதேச குற்றங்களை செய்தவர்களும் பார்த்துகொண்டிருந்தவர்களும் பின்னர் எவ்வாறு கையாண்டனர். "இனியொருபோதும் இல்லை" என்பது பொய் என்பதை ஆதாரங்களோடு வலியுறுத்தி இருக்கிறார்.

7வது கட்டுரை பொருளாதார நெருக்கடியும் அதனால் சந்தித்த பேரிடர்களின் அனுபவங்களையும் மாற்றங்களையும் பகிர்ந்திருக்கிறது.

8 வது கட்டுரையை வாசிக்கின்ற போதெல்லாம் எங்கள் நிலம் கண்முன்னே பறிபோகும் காட்சி விரிகிறது. ஆனால் கட்டுரை எம்மை பற்றியதல்ல. பாலஸ்தீனத்தின் வலிகளும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பும் அதன் சார்பு நாடுகளின் கூட்டு அராஜகமும் பற்றியதே அது. ஐ.நா எந்த வலிமையும் அற்ற அமைப்பு என்பதை நாங்களும் உணர்ந்திருக்கிறோம். எங்கள் மண் எவ்வாறு களவாடப்படுகிறதோ நாங்கள் எவ்வாறு இனப்படுகொலை செய்யப்பட்டோ அதே போல தாயகமற்ற யூத இனம் அதன் சுதேசிகளின் வேரறுப்பை சகாக்களின் உதவியோடு சகாப்தமாக செய்து வருகிறது. அதன் விபரிப்பு இனப்படுகொலை மீதான எங்கள் கோபத்தை தூண்டுவதான கட்டுரை.

இந்த கட்டுரைகள் என்னை உலக விடுதலைக்காய் போராடிய போராடுகின்ற இனங்களை, நாடுகளை, மனிதர்களை பற்றி மேலதிகமாக ஆராய தூண்டி இருக்கிறது. இதனை வாசிக்கும் போதே இடையிடையே தேடிக்கொண்டு போகும் வேகத்தை தந்திருக்கிறது. அக்காவிற்கே உரித்தான வசிய மொழி பெரிய கட்டுரைகளை கூட அதன் நீட்சி தெரியாது வாசிக்க வைக்கிறது. முடிந்தால் வாசிங்கள். நிச்சயமாக உங்கள் அறிவிப்பசிக்கு தீனி போடும். மீதி கட்டுரைகள் குறித்து வாசித்த பின்...

**சேனாதிராஜா வனிதா-**

அருவிக்கரை



**நாச்சியாரீவு பர்வீன்**

## தீயாய் எழு தோழி

சுயநலமும் சூழ்ச்சிகளும்
சூழ்ந்துன்னை நெருக்குகையில்
சோம்பல் முறித்துக் கொண்டு
சுருண்டு நீ படுக்கலாமா
சாம்பல் எழும் பீனிக்ஸாய்
சாதிப்போம் எழு தோழி

ஆமையாய் இதுகாறும்
அடங்கியது போதுமடி
ஊமையாய் நீயும்
ஒடுங்கியதும் போதுமடி
தூய்மையாய் நெஞ்சில்
துணிவை சுமந்து கொண்டு
தீமையைக் கொழுத்த
தீயாய் எழு தோழி

கட்டிய மனைவியுடன்
கைக்குழந்தை அத்தனையும்
பட்டினியில் போட்டு விட்டு
பட்டை தூள் அடிப்பவர்கள்
திக்கெட்டும் இருக்கிறார்கள்
திருத்தி எடுக்க வேண்டும்
தேடிப் பிடித்திடுவோம்
தீயாய் எழு தோழி

தாய்க்குலத்தை சீரழிக்கும்
தற்குறியின் நாளாந்த
நோய்க்கு மருந்துனது
நுனி விரலில் இருக்கிறது
காய்த்த மரங்கள்தான்
கல்லெறியை வாங்கக் கூடும்
கணக்கில் எடுக்காமல்
கை கோர்ப்போம் வா தோழி

கொள்ளை கொலை களவு
கொடுமைகள் நடக்கிறது
நல்லவர் போல் வேடமிட்டு
நாடகங்கள் நடிக்கிறார்கள்
உள்ள கறையை எல்லாம்
ஒரேயடியாய் போக்கி
வெள்ளையடிப்பதற்கு
விரைந் தெழுந்து வா தோழி

தாரத்தை தேர்வதற்கு
தட்சணைகள் கைக்கூலி
பேரங்கள் பேசுவோரை
பிரித்து அவர் உறவை
தூரப் படுத்தி வைத்து
தொடர்புகளை துண்டிக்க
தீரன்போல் நீயும் இன்றே
தீசயாய் எழு தோழி

சிறுவரையும் பெண்களையும்
சீரழிக்கும் பினாமிகளை
சிந்தையைச் செதுக்கி
சீர்திருத்தம் செய்ய வேண்டும்
குந்தகம் செய்கின்ற
குடும்பத் தலைமைகளின்
நிந்தனையைக் கொழுத்த
நெருப்பாய் எழு தோழி

ஊழல் கை எடை வாங்கல்
ஊனர்கள் தலை தாங்கல்
சூழலை மாசாக்கல்
சுதந்திரத்தை தூசாக்கல்
தீவில் எழுமாறாய்
திக்கெட்டும் நடப்பவற்றை
திருத்தி எடுக்க வேண்டும்
தீயாய் எழு தோழி

உன்னைச் சூழ்ந்திருப்போர்
உபத்திரவம் செய்கையிலே
கண்ணைத் திறந்து கொண்டு
காணாதிருக்கலாமா
மண்ணில் அவலத்தை
மாற்றி வளப் படுத்த
தண்ணீராய் இருக்காமல்
தணலாய் எழு தோழி..!

**பஸ்மினா அன்ஸார்**

## குறைந்தபட்சம்



நம்மிடம் திறமை உள்ளது.
நம்மை நம் காலத்குறைந்தபட்சத்தின்
முன்னணிக் கவிஞர்கள் என்று
மக்கள் அழைக்கிறார்கள்.
ஆகவும் மோசம்,
நம் வீடுகள் எளிமையானவை,
நம் அங்கீகாரம் அற்பமானது.
பசி, பரிதாபமான உடைகள்,
பணியாளர்களும் நம்மை
அலட்சியமாக நடத்துகிறார்கள்.
வாழ்வின் உச்சத்தில்,
நம் முகங்கள் சுருக்கங்களோடு
காணப்படுகின்றன.
நம்மில் எவரைப் பற்றியுமோ,
அல்லது நம் பிரச்சனைகளைக் குறித்தோ
கவலைப்படுகிறவர்கள் யாருமில்லை.
நாம்தான் நமது சொந்த பார்வையாளர்கள்.
நாம் ஒருவருக்கொருவர்
நமது இலக்கியத் தகுதிகளை
பாராட்டி மகிழ்கிறோம்.
இறந்துபோய்விட்ட
சிறந்த கவிஞர்களுடன் சேர்ந்து
நமது கவிதைகளும் ஒப்படைக்கப்படும்.
நாம் ஒருவருக்கொருவர்
ஆறுதல் கூறிக்கொள்வோம். குறைந்தபட்சம் நமக்கு
சந்ததியினர் இருப்பார்கள்.

**-தூ ஃபூ**

## அன்பான வாசகர்களே!

**அறிவுக்கரை பகுதிக்கு உங்களது இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் என உங்களது ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள் தரம் கண்டு பிரசுரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்க கீழே உள்ள whatsapp இலக்கத்தை பயன்படுத்தவும்.**

**0767877876**

## பெண்ணின் பெருமை பேசும் மாவனல்லை ஹம்ஸியாவின் 'அவள் ஓர் அத்திவாரம்' நூல்




பெண் இல்லாமல் மனித குலம் இல்லை. பெண்ணே மானிட வாழ்வின் மகுடமாக கருதப்படுகின்றாள். குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை என்ற அனைத்து செயற்பாடுகளிலும் பெண்ணின் அவசியம் உணரப்படுகின்றது. சிறந்த தொரு குடும்ப வாழ்க்கைக்கு ஆக்கமும், ஊக்கமும், செயல்திறனும் கொண்டே பெண்ணே அடிப்படை காரணியாக அமைகின்றாள். அதேநேரம் பெண்கள் வாழ்க்கையில் பல்வேறு விதமான இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் முகம் கொடுத்தவர்களாக வாழ்கின்ற சூழ்நிலைகளும் உள்ளன. பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், அவற்றிற்கான தீர்வுகள், பெண்கள் தொடர்பான ஆண் வர்க்கத்தின் பொறுப்புணர்ச்சி பற்றி பேசுவது பெண்ணியமாக கருதப்படுகின்றது. மாவனல்லையில் அண்மையில் இத்தகைய நூல் ஒன்று வெளியிடும் நிகழ்வு நடைபெற்றது. அந்த நிகழ்வில் 'அவள் ஒரு அத்திவாரம்' என்ற தலைப்பில் வளர்ந்து வரும் இளம் பெண் எழுத்தாளர் மாவனல்லை ஹஸ்மியாவால் எழுதப்பட்ட நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நூலின் ஆசிரியர் ஓர் இளம் எழுத்தாளராவர். இவர் தினசரி பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி உட்பட பல ஊடகங்களில் அவர் ஆக்கங்களை எழுதி வருகின்றார். அவ்வாறு எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக இந்த நூலை அவர் சமர்ப்பித்துள்ளார். இந்த நூலின் சில பிரதிகள் மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி அதிபர் எம்.நௌசாத் நஸீர் அவர்களிடம் அண்மையில் நுலகத்திற்காக நூலாசிரியரால் வழங்கி வைக்கப்பட்டது.

அவள் ஓர் அத்திவாரம் நூல் சுமார் 50 பக்கங்களைக் கொண்டதாக மிகவும் சிறிய நூலாக இருந்தாலும் 14 தலைப்புக்களில் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகின்ற பல விடயங்களை சமூகத்திற்கு முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சொல்லப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், பெண்கள் மீதான அடக்குமுறைகள், ஒதுக்கல்கள், புறக்கணிப்புக்கள் என்று நாம் அன்றாடம் காணும் பலவிதமான விடயங்களை கருப்பொருள்களாக எடுத்து முன்வைக்கின்றார் இந்த எழுத்தாளர். இவை பொதுவான பார்வையில் பெண்ணிய சிந்தனை ஒன்றின் வெளிப்பாடாக அமைந்தாலும் இந்த நூலை படிக்கின்ற அனைவருக்கும் படிப்பினைக்கும் சிந்தனைக்கும் உரிய நிறைய விடயங்களை முன்வைக்கின்றார். 'ஆண்களும் நாங்களும் வேறல்ல, பெண் சுதந்திரம் வார்த்தை வடிவில் மட்டுமே, அனுசரித்துப் போகும் வாழ்க்கையால் பிரச்சினைகள் குறையலாம், நற்பண்பாட்டின் வளர்ச்சிக்கு நாமே பொறுப்பு, குழந்தைகளின் உலகம், பெண் உலகின் கருமேகங்கள் விடியல் காண்பது எப்போது, பெண்களின் இருண்ட பக்கங்கள் விரைவில் விடியல் காண வேண்டும், ஆசிரியையாக அவள், நவீன மங்கை மற்றும் மங்கையவள் தான் சமூகத்தில் மானிட வர்க்கத்தின் அத்திவாரம்' என்ற அடிப்படையில் விடயங்களை முன்வைக்கின்றார்.

இவை அனைத்தும் பெண்களோடு சம்பந்தப்பட்டதாக அமைகின்றன. பெண்களால் மனித வர்க்கம் அடைகின்ற மேன்மைகள், சிறப்புக்கள், அடைகின்ற நன்மைகள், நிறைவேற்றப்படுகின்ற பொறுப்புக்கள், தாய்க்கு மகளாக, மனைவியாக, தாயாக, சிறந்த ஒழுக்கமான்புகளைக் கொண்ட மானிட வர்க்கத்தின் உருவாக்க சிப்பியாக, சமூகத்தின் ஓர் அங்கத்தவளாக என்ற அடிப்படையில் பெண்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக அமைந்தாலும் குடும்ப வாழ்விலும் சமூகத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், அடக்குமுறைகள், ஓரங்கட்டல்கள், உதாசீனப் போக்குகள் என்று பலவிதமான பிரச்சினைகள் உள்ளன. அவை அடையாளம் காணப்பட்டு தீர்க்கப்பட வேண்டும். பெண்களும் ஆண்களைப் போன்றே சமூகத்தில் உன்னதமான நிலையில் மதிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இருப்பது இந்த நூலின் சிறப்பம்சமாகும்.



## மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை

# சட்டமூலம் மீதான விவாதம்

### பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆற்றிய உரையின் சுருக்கம்...

கௌரவ தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே, பாராளுமன்றத்திற்கு (6) சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த விவாதம் மிகவும் முக்கியமானது. குறிப்பாக நிதி மற்றும் பொருளாதார நிலைமைகள் குறித்து நாம் விவாதிக்கின்ற ஒரு தருணம் இது.

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நிதி ஒழுங்குமுறைகள் குறித்து விரிவான விமர்சனங்கள் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். நாட்டின் தன்னாதிக்கம் மற்றும் இலங்கையின் நீதித்துறை சுயாதீனம் தொடர்பான விடயங்களில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட தரப்பினரின் எதிர்ப்புக்கள் மற்றும் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அது தொடர்பான அரசியல் முடிவுகள் குறித்து ஜனாதிபதியின் உரையில் பல முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

நாங்கள் இன்று சபையில் இந்த முக்கியமான சட்டமூலம் மீது விவாதித்துக் கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில், தமிழ்நாட்டில் நடந்து முடிந்திருக்கின்ற தேர்தல் சம்பந்தமாக இங்கு சபையில் பலரும் கதைத்தார்கள். குறிப்பாக, தமிழ்நாட்டில் முதலமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து பிரபல சினிமா நட்சத்திரமாக எங்களுக்கெல்லாம் அறிமுகமான, ஜோசப் விஜய் என்று தன்னை எந்தத் தயக்கமும் இல்லாமல் ஒரு கிறிஸ்தவராகவே அடையாளப் படுத்துவதற்கு அதுவரையும் தான் தளபதி விஜய் என்று ரசிகர்கள் மத்தியில் அறியப்பட்டிருந்த நிலையில், தன்னுடைய பெயரை வேண்டுமென்றே ஜோசப் விஜய் என்று சொன்னதன் மூலம் தான் சார்ந்திருக்கின்ற சமயத்தை அடையாளப்படுத்துகின்ற ஒரு பெயரை தயங்காமல் குறித்துப் பேசி, இன்று முழு தமிழகத்திலும் அதிகூடிய ஆசனங்களை வென்ற ஒரு கட்சியாக, வெறும் இரண்டு வருடங்களுக்குள்ளாக மிகப்பெரிய இமாலய சாதனையைப் புரிந்திருக்கின்ற தளபதி விஜய் அவர்களுக்கு என்னுடைய கட்சியின் சார்பில் நான் என்னுடைய வாழ்த்துக்களைச் சமர்ப்பித்துக் கொள்ள விரும்புகிறேன். அதே சமயம் தமிழ் நாட்டில் வெற்றியீட்டிய அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மேலும் இங்கு தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஸ்டாலின் பற்றி நான் சொல்லியாக வேண்டும். இந்த நாட்டில் இருக்கிற தமிழ் பேசும் மக்களுக்கு மாத்திரமல்ல, உலகளாவிய தமிழ் பேசும் மக்களுடைய தாயகமாக தமிழகத்தைக் கருதி விஷேடமாக எங்களைக் கௌரவப்படுத்துவதற் காக அவர் 'அயலகத் தமிழர் தினம்' என்ற ஒரு தினத்தை அடையாளப்படுத்தி அதைச் செய்து கொண்டு வந்தார். அவ்வாறான நல்ல விடயங்களை, அதே நேரம் தன்னுடைய கொள்கை சார்ந்து அவர் கடைப்பிடித்த கொள்கைகளின் ஊடாக 'திராவிட மாடல்' ஆட்சி என்ற ஒன்றை உருவாக்கி, மதச்சார்பற்ற அதே நேரம் மதவாதச் சக்திகளுக்கு சிம்மசொப்பனமாக தமிழகத்தை மாற்றியமைத்த பெருமை அவருக்குரியது. அவருடைய காலத்தில் நாங்கள் எல்லோரும் எதிர்பார்த்த மாதிரி தமிழகம் முழு இந்தியாவிலுமே ஆகக் கூடுதலான வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டு வருகின்ற ஒரு மாநிலமாக அதை மாற்றி அமைக்கின்ற ஒரு பொருளாதார விருத்தியை அவர் செய்து காட்டினார் என்பதற்காக அவரை நாங்கள் வாழ்த்த வேண்டும்.

அது மாத்திரமல்ல அவரின் வழியில் அவர் போன்ற அனுபவமிக்க அரசியல்வாதிகளின் ஆலோசனைகளோடு, தேர்தல் முடிந்த பிற்பாடு புதிய முதலமைச்சர், இவ்வாறான விஷயங்களில் முன்னணி ஆட்சியாளர்களுடைய விமர்சனங்கள் எவ்வாறு இருந்தபோதிலும், அவருடைய சாதனைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். அதே நேரம் மதவாதச் சக்திகள் தமிழகத்தில் தெற்கில் புகுந்து விடுவதற்கு இடம் கொடுக்காமல் அவர் செயல்பட வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும்,நான் ஒரு சில வார்த்தைகள் இந்தச் சட்டமூலம் குறித்து பேச விழைகிறேன்.

இன்று நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் இந்த குறிப்பிட்ட சட்டமூலத்தை நான் கையாள விரும்புகிறேன். இது மீட்பு, மறுவாழ்வு, நொடிப்புநிலை மற்றும் தனிப்பட்ட திவால்நிலை ஆகியவற்றுடன் தொடர்புடையது. தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மீட்பு, மறுவாழ்வு மற்றும் திவால்நிலை தொடர்பான சட்டங்களை திருத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும், 19 ஆம் நூற்றாண்டில் காலனித்துவ காலத்தில் இயற்றப்பட்ட திவால் அவசரச் சட்டத்தை ரத்து செய்வதற்கும் இந்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது.

நாட்டில் முதலீடுகள் தொடர்பாக பொது நிதிக் குழுவின் முன் அவர் வந்தபோது, இந்தியாவில் 2016இல் இயற்றப்பட்ட 'திவால் மற்றும் திவால் நிலைச் சட்டம்' (IBC) குறித்து நாம் படிப்பது அவசியம்.என்று அவர் சுட்டிக் காட்டினார். ஐந்தொகையில் 9% ஆக இருந்த செயல்படாத கடன்களை 2% அல்லது அதற்கும் கீழாக மாற்றுவதில் அது வெற்றி பெற்றுள்ளது. திவால் மற்றும் திவால் நிலை நெறிமுறைகளை அமல்படுத்தியதே இதற்குக் காரணமாகும். குறிப்பாக காலவரையறைக்குட்பட்ட பயிற்சிகள், இந்த சட்டம் ஆரம்ப காலகட்டமாக 2 மாதங்களை மட்டுமே வழங்குகிறது. துயரத்தில் உள்ள எந்தவொரு கூட்டாண்மையும் மறுவாழ்வு பெற, இங்கு திவால் நெறிமுறை யானது முதல் காலகட்டத்திற்கு 180 நாட்களை (கிட்டத்தட்ட 6 மாதங்கள்) வழங்குகிறது, மேலும் இது அதிகபட்சமாக 360 நாட்கள் வரை காலவரையறைக்குட்பட்ட நடவடிக்கையை செயல்படுத்து கிறது. எனவே தொடக்கத்திலிருந்தே பல சொத்துக்களைக் கொண்ட ஒரு நிறுவனத்திற்கு மறுவாழ்வு அளிக்கத் தொடங்கும் போது, முதலீட்டாளர்களை சமாதானப் படுத்துவது முக்கியம். மேலும் நீங்கள் இதைக் கட்டுப்பாட்டிலிருந்து கடன் கட்டுப்பாட்டிற்கு மாற்று கிறீர்கள், இது நெருக்கடியில் உள்ள நிறுவனத்திற்கு உதவ ஒரு திட்டத்தை எளிதாக்கும் ஒரு விடயமாக மாறுகிறது.

இது தொடர்பாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்."தித்வா" புயல் காற்றுக்குப் பிறகு தங்கள் சொத்துக்களை இழந்த தரப்பினருக்கு உதவ முன்வருவதில் இந்த அரசாங்கத்தின் தோல்வி காணப்படுகிறது. உதாரணமாக, நான் பிரதிநிதித்துவப் படுத்தும் மாவட்டத்தில், மத்திய வங்கி வங்கித் துறையின் ஒதுக்கீடு சுமார் 2000 மில்லியன் மட்டுமே வங்கிகளால் விநியோகிக்கப்பட்டுள்ள தாகக் கூறியதை நான் பார்த்தேன். 4000 அல்லது 3000 மில்லியன் என்று தேவைப்படும் நிலையில் மிகவும் வருத்தமளிக்கும் விதமாக 2000 மில்லியன் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இது வங்கிகளின் தயக்கம் மற்றும் மனப்பான்மையின் காரணமாகும், இது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும். அதைத்தான் நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனவே இதன் மூலம் இப்போது முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு அதிகபட்சமாக 5 இலட்சம் வழங்கப்படும் என்று அரசாங்கம் சொன்னது என்ன ஆனது? மக்கள் எவ்வளவு தூ ரம் ஒடுக்கப்பட்டார்கள் என்று அவர்கள் இப்போது சொல்கிறார்கள். மேலும் நன்கொடைகள் மூலம் கிட்டத்தட்ட 8000 மில்லியன் பணம் சேகரிக்கப்பட்டது, அது முறையாக அங்குள்ள மக்களுக்கு விநியோகிக்கப்பட்டதா? அந்தப் பிரச்சினை மிக விரைவாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றார்.

# தொட்டவத்தை பெரிய பள்ளியில் ஷாதுலியா மனாகிப் நிகழ்வு

**(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)**



பாணந்துறை தொட்டவத்தை றௌழதுல் அத்கய்யா பெரிய பள்ளிவாசலில் 157 ஆவஹீது வருட ஷாதுலியா மனாகிப் பாராயண நிகழ்வு அண்மையில் பள்ளிவாசல் கதீப்மார்களான மௌலவி ரிஸ்கான் முழம்மத் (ஸெயிலானி) மற்றும் எம்.கே.ஏ.கபூர் (முர்ஸி) தலைமையில் வெகு விமரிசையாக ஆரம்பமானது.

இந்த ஆரம்ப நிகழ்வில் பள்ளிவாசல் பரிபாலனத்துக்கு உட்பட்ட பள்ளிவாசல்களின் உலமாக்கள், முகத்தமீன்கள்,நிர்வாகிகள் மற்றும் ஜமாத்தார்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கடந்த ஏழாம் திகதி இஷாத் தொழுகையின்இந்த பின்னர் ஆரம்பமான இந்த மனாகிப் ஓதல் பத்து தினங்கள் தொடர் நிகழ்வாக இடம்பெற்று வருகின்றதுடன் இதற்கான சிறப்பு ஏற்பாடுகளை பள்ளிவாசல் பரிபாலன சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரிபாலன சங்க செயலாளர் சில்மி சஹீல் தெரிவித்தார்.

மனாகிப் பாராயண ஆரம்ப நிகழ்வில் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி ஏ.எச்.இஹ்ஸானுத்தீன் (நளீமி)விஷேட பயான் உரை வழங்கினார்.ஆரம்ப தினம் முதல் விஷேட உலமாக்களினால் சிறப்பு பயான் உபன்னியாசம் நிகழ்த்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)
பள்ளிவாசலில் 157 ஆவஹீது வருட ஷாதுலியா மனாகிப் பாராயண நிகழ்வு அண்மையில் பள்ளிவாசல் கதீப்மார்களான மௌலவி ரிஸ்கான் முழம்மத் (ஸெயிலானி) மற்றும் எம்.கே.ஏ.கபூர் (முர்ஸி) தலைமையில் வெகு விமரிசையாக ஆரம்பமானது.
இந்த ஆரம்ப நிகழ்வில் பள்ளிவாசல் பரிபாலனத்துக்கு உட்பட்ட பள்ளிவாசல்களின் உலமாக்கள், முகத்தமீன்கள்,நிர்வாகிகள் மற்றும் ஜமாத்தார்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.
கடந்த ஏழாம் திகதி இஷாத் தொழுகையின்இந்த பின்னர் ஆரம்பமான இந்த மனாகிப் ஓதல் பத்து தினங்கள் தொடர் நிகழ்வாக இடம்பெற்று வருகின்றதுடன் இதற்கான சிறப்பு ஏற்பாடுகளை பள்ளிவாசல்கள் பரிபாலன சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரிபாலன சங்க செயலாளர் சில்மி சஹீல் தெரிவித்தார்.
மனாகிப் பாராயண ஆரம்ப நிகழ்வில் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி ஏ.எச்.இஹ்ஸானுத்தீன் (நளீமி) விஷேட பயான் உரை வழங்கினார்.
ஆரம்ப தினம் முதல் விஷேட உலமாக்களினால் சிறப்பு பயான் உபன்னியாசம் நிகழ்த்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களுக்கான மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி விரைவில் நியமனம்

(கே.எ.ஹமீட்)

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்றம் (07) நடைபெற்ற போது அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகேவிடம் வாய்மூலமாக வினவிய "அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மொழி பேசும் பிரதேச செயலகங்களுக்கான மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி தற்போது தற்காலிகமாக நியமிக்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்ததோடு நிரந்தரமாக நியமிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா?" என கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், "தற்போது நேர்முகப்பரீட்சை நடைபெற்று கொண்டிருக்கிறது, விரைவில் அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் பிரதேசங்களுக்கான நிரந்தர இளைஞர் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்" என்று அமைச்சர் தெரிவித்தார். இதனை தொடர்ந்து "அம்பாறை மாவட்டத்தில் 13 விளையாட்டு உத்தியோகத்தர்கள் காணப்படு கின்றனர். அட்டாளைச்சேனை



பிரதேசத்திற்கான விளையாட்டு உத்தியோகத்தர் இன்மையால் பிரதேச விளையாட்டு போட்டிகள் நடைபெறாமல் மாவட்ட விளையாட்டுப் போட்டி நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய முடியுமா" என பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை அமைச்சரிடம் கேள்வி எழுப்ப, அதற்கு பதிலலிக்கையில் "பல மாவட்டங்களில் விளையாட்டு உத்தியோகத்தர்கள் வெற்றிடங்கள் நிலவுகின்றன. அவ்வெற்றிடங்களை நிவர்த்தி செய்ய வேண்டியது மாகாண சபையாகும். இருந்தாலும் விளையாட்டு போட்டியுடன் இது தொடர்புடையதனால் அதற்கான சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் விரைவாக கலந்துரையாடி தீர்வைப் பெற்றுத்தருவோம்" எனவும் விளையாட்டுத்துறை அமைச்சர் பதிலளித்தார்.

## அனுராதபுரம் மாநகர சபைக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு



(எம்.ரீ.ஆரிப்)

அனுராதபுரம் மாநகர சபைக்கு இரண்டு ஜேசிபி இயந்திரங்கள் மற்றும் ஆறு சர்வதேச தரத்திலான குப்பை தொட்டி தொகுதிகள் வழங்கும் நிகழ்வு வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் (06) நடைபெற்றது. மாநகர சபையின் நிதியுதவியுடன் இரண்டு ஜேசிபி இயந்திரங்கள் ரூ 3.6 மில்லியன் செலவில் வழங்கப்பட்டது. சர்வதேச தரம் வாய்ந்த வெள்ளை இரும்பினால் ஆன இந்த குப்பைத் தொட்டி தொகுதிகள் ரஜரட்டவில் பிறந்து வெளிநாடுகளில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ள குழுமத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக அவர்கள் சுமார் 3 மில்லியன் ஷரூபாய் நிதிச் செலவு செய்துள்ளனர். அனுராதபுரத்தில் பிறந்து வெளிநாட்டில் வசிக்கும் குழுமம் தங்கள் தாய் நாட்டிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்த நன்கொடையை வழங்கியுள்ளது. இந்நிகழ்வின் போது அனுராதபுரம் மாநகர மேயர் என்.கருநாரத்ன, குழுமத்தின் சார்பாக மெனிக் ஹெட்டியாராச்சி, ஆளுநரின் ஒருங்கிணைப்பு செயலாளர் ஆனந்த ரத்நாயக்க உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## தில்லையூர் அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் இருவர் வலய மட்டத்திற்கு தெரிவு

(எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி கோட்ட மட்ட விளையாட்டு போட்டிகள் இடம்பெற்று வரும் நிலையில் (08) மாம்புரி பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற மெய்வல்லுனர் போட்டிகளில் கற்பிட்டி தில்லையூர் அரசினர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலய மாணவர்கள் இருவர் வலய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை யின் அதிபர் எஸ் எம் அரூஸ் தெரிவித்துள்ளார் இதன்படி கற்பிட்டி தில்லையூர் அரசினர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தின் மாணவி இல்மா பலா 12 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் உயரம் பாய்தல் போட்டியில் முதலாம் இடத்தையும் மாணவன் என்.எம். றுவைத் 14 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் குண்டு எறிதல்



போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று வலய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர், எனவும் இம் மாணவர்களுக்கு பயிற்சி அளித்து ஊக்கப்படுத்திய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோருக்கு தமது பாடசாலை சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் அதிபர் மேலும் தெரிவித்து ள்ளமையும் குறிப்பிடத்தக்கது

## மருதானை கடற்கரையை சுற்றுலா மையமாக மாற்றும் BUSF-இன் திட்டம் :

**களத்தில் இறங்கிய நகரபிதா!!**



(பீ.எம் முக்தார்)

பேருவளை மருதானை கடற்கரை மற்றும் Bent பகுதியை தூய்மைப் படுத்தி, பாதுகாப்பான சுற்றுலா வலயமாக மாற்றும் திட்டத்தை நேரில் ஆராய்வதற்காக, பேருவளை நகரபிதா மபாஸிம் அஸாஹிர் (07) குறித்த பகுதிக்கு விசேட களவிஜயம் ஒன்றை மேற்கொண்டார். பேருவளை யுனிட்டி அன்ட் சோசியல் ஃபோரம் அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட முன் மொழிவை அடுத்து, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் நோக்கில் இந்த விஜயம் அமைந்தது. இதன்போது, கடற்கரை ஓரத்தில் நிலவும் சமூகச் சீர்கேடுகள், பற்றைக் காடுகள் மண்டியுள்ள பகுதிகள் மற்றும் கடற்கரையின் தூய்மை குறித்து நகரபிதா விரிவாக ஆராய்ந்தார். BUSF அமைப்பின் சமூக நல ஒருங்கிணைப்பாளர்களான முஹம்மத் நவீத் மற்றும் பாத்திமா பஸ்லா ஆகியோர், இப்பகுதியை எவ்வாறு மக்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு குடும்பப் பூங்காவாகவும், இரவு நேர உணவகங்கள் மற்றும் நூலகம் கொண்ட நவீன மையமாகவும் மாற்றலாம் என்பது குறித்து நகரபிதாவிற்கு விளக்கமளித்தார். ஆய்வின் பின்னர் கருத்துத் தெரிவித்த நகரபிதா, "இளைஞர்கள் முன்னின்று முன்னெடுக்கும் இவ்வாறான சமூக மாற்றத்திற்கான திட்டங்களை நாம் வரவேற்கிறோம். மருதானை கடற்கரையை ஒரு முன்மாதிரியான இடமாக மாற்ற நகரசபை தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்" என உறுதியளித்தார். இந்த விஜயத்தின் போது BUSF அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் நகரசபை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## குடியிருப்புக்குள் புகுந்து காட்டு யானை அட்டகாசம்



(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட காவத்தமுனை காகித நகர் கிராமத்தினுள் புகுந்த காட்டு யானை அட்டகாசம் புரிந்துள்ளதுடன், குடிசைகள், விவசாய பயிர்ச்செய்கைகளுக்கும் சேதத்தை உண்டு பண்ணியுள்ளது. தொடர் காட்டு யானைகளின் அச்சுறுத்தலினால் உயிரச்சுறுத்தல் களும் சொத்தழிவுகளும் ஏற்படுவதுடன், வாழ்வாதாரமும் பாதிக்கப்படுவதாக பிரதேச மக்கள் கவலையும் விசனமும் தெரிவிக்கின்றனர். கிராமத்தை அண்டிய காட்டுப் பகுதியில் குடி கொண்டுள்ள யானைக்கூட்டம் அயல் கிராமங்களை அச்சுறுத்தி வருவதுடன், உயிராபத்துக்களையும் பயந்தரும் நூற்றுக்கும் அதிகமான தென்னை மற்றும் கனி தரும் மரங்களையும் அழித்து நாசப்படுத்தியுள்ளன. இதனைக்கட்டுப்படுத்த பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும், அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இதற்கான நிரந்தரத் தீர்வுகளைப் பெற்றுத்தந்து உயிரச்சுறுத்தல் சொத்தழிவுகளிலிருந்து தம்மைப் பாதுகாக்க நிரந்தர நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




பயாஸா பாஸில்

# 'சிறார்களின் வாசிப்பில் பெற்றோர்களின் பங்களிப்பு என்ன'



சிறுவர்கள் நம் நாட்டின் அருஞ் செல்வங்கள். இன்றைய நாட்டின் வருங்கால பிரஜைகள். இவர்கள் நல்லவர்களாக வல்லவர்களாக வளர வேண்டும். சிறார்களுக்கான பல உரிமைகள் உள்ளது. அதில் அடிப்படை கல்வி கற்பது பிறப்புரிமையாகவே கருதப்படுகின்றது. எனவே இப்படியான அழியா செல்வமான கல்வியினை தொடர முதல் அடித்தளம் வாசிப்பு. எனவே வாசிப்பின் முக்கியத்துவம் பெற்றோர்களாகிய நாம் அறிந்து கொள்வது சாலச் சிறந்தது. ஆகவே சிறுவர்கள் வாசிப்பில் பெற்றோர்களாகிய நாம் என்ன பங்களிப்பு செய்ய வேண்டும். அதனை எவ்வாறு செயல்படுத்துவது. என்று அறிந்து கொள்ள வேண்டும். எல்லா காலத்துக்கும் ஏற்ற வகையிலான நல்ல கருத்துக்கள் தரக்கூடியதாக அமைகின்ற நூல்களை நாம் பிள்ளைகளுக்கு வழங்கி வாசிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க வேண்டும். நாமும் கற்று மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்க பிள்ளைகளுக்கு வழி வகுக்க வேண்டியது பெற்றோராகிய நமது கடமை ஆகும். பிள்ளைகளின் வாழ்க்கைக்கு திருப்புமுனையாக அமைவது இந்த வாசிப்பே என்று உறுதியாக கூறுவதில் மிகையாகாது. 'வாசிப்பு மனிதனே பூரணமாக்கும்' எனவே கையில் ஸ்மார்ட்போன்களை கொடுப்பதற்கு பதிலாக நல்ல நூல்களை கொடுக்கலாமே.

**வாசிப்பின் போது நாம் கவனிக்க வேண்டியவை.**

1.மொழித்திறன் விருத்தி 2.கிரகித்தல் பயிற்சி

3.திறன் மதிப்பீடு

எனவே இவை மூன்றும் கிடைக்குமா என் பிள்ளையின் வாசிப்பிலும் கல்வியிலும் எந்தவிதமான தடுமாற்றமும் இன்றி பிள்ளை முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

வாசிப்பின் போதும் மொழித் திறன் விருத்தி அதாவது Skill evalution ஏற்படுகின்றது. பேச்சுத்திறன் சிறார்கள் மத்தியில் ஒழுங்கான உச்சரிப்புடன் மக்கள் மத்தியிலும் பேசும் ஆற்றல் ஏற்படுகின்றது. இதனால் பயமும் இல்லாமல் எதையும் துணிவுடன் சாதிக்கக் கூடிய ஆற்றலும் ஏற்படுகின்றது. அனுபவங்களும் ஏற்படும். எனவே மொழித்திறன் விருத்திக்கு வாசிப்பே அடித்தளம் என்றே கூற வேண்டும். அடுத்ததாவது திறன் மதிப்பீடு இதனால் அவர்களின் சிறந்த மதிப்பீட்டை பெற முடியும். பேச்சு திறமை, கட்டுரை, சிறுகதை, நாவல், பாடல்,கவிதை என பல திறமைகளின் மதிப்பீட்டை பெறவும் வாசிப்பு முக்கியமாக அமைகிறது. அது மட்டுமின்றி தயக்கமின்றி எதற்கும் விரைந்து முன்னேற கூறியதாக அமைகிறது. வாசிக்கும் சூழலை ஏற்படுத்த அழகு படுத்தியும் கொடுக்க வேண்டும். வீட்டின் ஒரு பகுதியை ஒதுக்கி வாசிப்புக்கு தகுந்தாற்போல் காட்சிப்படுத்தி சிறப்பான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்க பெற்றோர்களாகிய நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். நூலகம் அமைத்து கொடுக்க வேண்டும். வீட்டில் மற்றும் அன்றே பாடசாலையும் வகுப்பறையில் ஒரு பகுதியை ஒதுக்கி இவ்வாறான வேலை திட்டங்களை முன்னெடுக்க சிறிய ஒரு நூலகத்தை உருவாக்க நீங்களும் ஆசிரியர்களுடன் கலந்தாலோசனை வழங்கி இந்த முயற்சியில் ஈடுபட முடியும். 'புத்தகமில்லாத வீடு ஜன்னல் இல்லாத அறை போன்றது எந்த வீட்டில் நூலக அமைப்பு இருக்கிறதோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கும்' என்பதே உண்மை..

அடுத்த கட்டமான நாம் கிரகித்தல் பயிற்சி டுளைவநனைபை யஉவளைவைல இதனூடாக சிறார்கள் மத்தியில் உருவாக்கக்கூடிய அடுத்த பயிற்சி என்றே கூற வேண்டும். பிள்ளைகளின் மத்தியில் கிரகிக்கும் தன்மை இல்லை என்றால் அவர்களால் எதையும் புரிந்து கொள்ளும் சிறப்பான ஆற்றலை இழந்து விட நேரிடும். இதன் இடையே பெற்றோர்களாகிய நீங்களே பிள்ளைகளை ஒழுங்காக வாசிக்க வில்லை, வினாக்களுக்கு விடை எழுதவில்லை... ஏதோ ஒன்றுக்கு ஏதோ ஒரு பதிலை கொடுத்திருப்பதாக கூறி அவர்களை திட்டவும்,புலம்பவும் அடிக்கவும், செய்வீர்கள். பெற்றோர்களே முதலில் கவனியுங்கள்! உங்கள் பிள்ளைகளை நீங்கள் நண்பர்களாக்குங்கள். அவர்களது மனநிலையை புரிந்து கொள்ளுங்கள்.அவர்களுடன் நேரத்தை செலவிட முயற்சியுங்கள். நல்ல அறநெறி கதைகளை கட்டுரை வாசிப்பதற்கான நல்ல நூல்களை அள்ளிக் கொடுங்கள். அவர்களை சந்தோஷப்படுத்துங்கள். எந்த பிள்ளைகளிடமும் கிரகிக்கும் தன்மை இல்லையோ அந்த பிள்ளை எந்த தேர்விலும் தேர்ச்சி பெற முடியாது

இக்காலத்தைப் பொறுத்தவரையில் நாம் பிள்ளைகளுக்கு பலவிதமான பரிசுப் பொருட்களை வாங்கிக் கொடுக்கின்றோம். ஏன், நாம் பிள்ளைகளுக்கு பரிசுப் பொருளாக நல்ல புத்தகங்களை வாங்கிக் கொடுத்தால் சிறப்பாக இருக்குமே. ஒருமுறையாவது நல்ல நூல்களை அன்பளிப்பு செய்து பாருங்கள்.

நூலகம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லும் பழக்கத்தை வழமையாக்கிக் கொள்ள ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். பத்திரிகைகள் வாரம் தோறும் வாங்கிக் கொடுங்கள். பாட்டு புத்தகங்களை வாங்கி அவர்களுடனே பாடலின் இசைத்தபடி அபிநயத்துடன் நடனம் ஆடுங்கள். அப்போது அவர்களது மனது ஒரு ஒருநிலை படுத்தப்பட்டு வாசிப்பின் மட்டுமல்ல படிப்பிலும் ஆர்வம் உண்டாகும். உங்கள் மீது அன்பும் பாசமும் ஏற்படும். மனம் ஒருமுகப்படும். பகுத்தறிவு பெருகும். நினைவாற்றல் ஏற்படும். வாசிப்பினால் மொழிவளம் ஏற்படும். மன அழுத்தம் குறையும். எழுத்தாற்றல் படிப்படியாக முன்னேற்றம் காணும்.

புரட்சிப் பாதையில் பெரிய ஆயுதமாகிய புத்தகங்களளைக் கொடுங்கள். அவர்கள் சிறந்தவர்களாக மாற்றலாம். வாசிப்பின் போது சிறார்கள் மத்தியில் புது கலைச் சொற்கள் அறிந்து கொள்ளும் அவசியத்தைப் பெற்றுக் கொள்வார்கள். கோபத்தை கூட கட்டுப்படுத்தும் சக்தி நூல்களுக்கு உண்டு. நற்சபையில் அஞ்சாமையுடன் பேச நல்ல நூல்களைப் படிக்க பழகிக் கொள்ளும் போது ஆளுமை விருத்தி பெறும்.

கவனச்சிதறல், ஓரிடத்தில் நிலையாக நிற்க முடியாத தன்மை, எதிர்மறையான பேச்சு இவற்றையெல்லாம் சிறந்த நூல்கள் வாசிப்பதன் மூலம் அவர்களின் மனப்பாங்கு வேறு திசைக்கு திருப்பிவிட முடியும்.

வாசிப்பின் முக்கியத்துவத்தை முதற்கண் பெற்றோர்களாகிய நாம் உணரும் வரை அதனை நாம் குழந்தைகளிடம் ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் அவர்களிடம் இருந்து ஒருபோதும் பெற முடியாது என்பதே புரிந்து கொள்ளுங்கள். 'திக்கி பேசும் குழந்தை கூட வாசிப்பதனால் வார்த்தைகளின் உச்சரிப்பையும் சரியாகப் பேச கூடிய வல்லமையும் பெறுகின்றது' என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறி வருகின்றனர்.

'நல்ல புத்தகங்கள் எங்கு எரிக்கப்படுகிறதோ, அங்கு நல்ல மனிதனும் எரிக்கப்படுகின்றான்' என்று சேகுவாரா கூறியுள்ளார். நாம் எதிர்பார்ப்புகள் நிறைந்த உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் அல்லவா! எனவே சிறார்கள் எதிர்கால தேவைக்கு வங்கியில் சேமிப்பு வைத்து விடுகின்றோம். அதுபோலவே பிள்ளைகளின் எதிர்கால இலட்சியத்துக்கு திறமைக்கும் மூளையின் வாசிப்பின் சேமிப்பையும் ஏற்படுத்திக் கொள்ள அக்கறை செலுத்த வேண்டும். நல்ல நூல்கள் எமது உற்ற நண்பனாக நினைப்போம். அரை மணி நேரம் படிக்க வைத்தாலே போதும். நல்ல எண்ணம், சிந்தனை, செயல்கள், என்று வரும்போது நல்ல வாழ்க்கையும், வழிகாட்டல்களும் எமக்கு வாசிப்பினாலேயே கிடைக்கும் . 'சில சமயம் நம் எந்த புத்தகம் படிக்கிறோமோ அதுவாகவே மாறிவிடுவோம்'.

எனவே, பெற்றோர்களே பிள்ளைகளுக்கு தினமும் புத்தகங்கள், பத்திரிகைகள், என்பவற்றை வாசிக்க பழக்கங்கள் தினமும் எத்தனை நிமிடம் வாசித்தார்கள், எதனை வாசித்தார்கள் என்பதனை அட்டவணைப் படுத்துங்கள். வீட்டில் உள்ள மற்ற பிள்ளைகளுடன் வாசிப்பு போட்டி வைத்து, சிறு அன்பளிப்புகளை வழங்குங்கள். தினமும் பிள்ளை விரும்பிய ஐந்து வசனங்களை ஒரு கொப்பியில் எழுதி வரச் செய்யுங்கள். வீட்டில் சுவர் பத்திரிகை ஒன்றை தயார் செய்து அவர்களது ஆக்கங்களை எழுதி பதிவு செய்யுங்கள். வீட்டில் ஒரு வாசிக சாலை ஒன்றை அமைத்துக் கொடுங்கள். அயல் வீட்டுப் பிள்ளை-களையும் வரவழைத்து வாசிப்புக்கு முன்னுரிமை வழங்குங்கள். அத்தோடு உங்கள் பிள்ளையும் அதே பழக்கத்தை தொடர்ந்து செய்ய பழகும். வீட்டருகே இருக்கும் வாசிக சாலைக்கு வாரம் ஒரு முறை அழைத்துச் சென்று அங்கத்துவம் பெறுங்கள். எனவே எப்போதும் நாம் வாசிப்பை நிறுத்தி விடாமல் இதனை இன்னும் சமூகத்தில் உள்ளோருக்கு ஏத்தி வைத்து நீங்களும் பயன்பெறுங்கள். வாசிப்பின் வீழ்ச்சியை நிறுத்தி விட முடியாது. வாசிப்போம்வளம் பெறுவோம். வாசிப்பே என்றும் மனிதனை பூரணமாக்கும். எனவே பெற்றோர்களாகிய நாம் இதனை உணர்ந்து சிறார்களின் வாசிப்பின் வளர்ச்சிக்கு பெரும்பாலும் உதவியாக இருப்போம்.



A. A. Murshidha Begum
Akurana
Kandy

# மனதோடு சில நிமிடம்...

தமது எண்ணங்கள் தான் எம்மை வெற்றி பெறவோ, வீழ்த்தவோ காரணமாகின்றன. வாழ்வினைச் சீராக்குவதும் நிலைகுலையச் செய்வதும் எமது எண்ணங்களில்தான் தங்கியுள்ளது. பிரச்சினைகள் என்று பின்வாங்கி நின்றால் வாழ்க்கையில் முன்னேற்றங்களை அடையவே முடியாது. எனவே, தான் எதையும் தைரிய மனதுடன் முகங்கொடுக்கப் பழகிக் கொள்ளுங்கள். நாம் செய்கின்ற விடயங்கள் இறை பொருத்தத்துடன் பிறருக்கு எந்த விதத்திலும் பாதிப்பில்லாமலும், அதே சமயம் அந்த விடயங்களில் உண்மையும், நேர்மையும் இணைந்திருக்க யாருக்கும் எதற்கும் பயமில்லாது பயணிக்க முடியும். முதல் முயற்சிகளிலே வெற்றியை எதிர்பார்ப்பது முட்டாள்த்தனம். முதல் வெற்றி, முதல் தோல்வி இரண்டிலுமே தங்கிவிடாது மேலும் மேலும் உங்களது முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டே இருங்கள். உங்களுக்கென பாதையினை நீங்கள்தான் உருவாக்க வேண்டுமே தவிர யாரையும் எதிர்பார்க்கவோ அல்லது தங்கி இருக்கவோ கூடாது.

தன்னம்பிக்கை இறைவனைத் தவிர வேறு யாரின் தயவின்றி வாழக் கற்றுக்தரும் பெரும் ஆசான். தன்னம்ப-ிக்கை தரும் அதிசயத்தினை அனுபவித்தால் மட்டுமே அதன் நலவினை நொடிக் கொருமுறை உணர முடியும். நேர்மறை எண்ணங்கள் தான் தன்னம்பிக்கை வளர தலைவருடி விடும். எல்லோரும் விரும்பும் ரோஜாக்களும் முட்களுடன் தான் வாழ்கின்றன. அவை முட்களுக்குப் பயந்து இன்று மலர மறுத்திருந்தால் அதன் அழகினை இங்கு யாருமே கண்டிருக்க மாட்டோம் இல்லையா? அதுபோல தான் எத்தனை துன்பங்கள் எம்மைச் சூழ்ந்தாலும் அதனைக் கடந்து போராடத் துணிய வேண்டும்.



வாழ்க்கை என்பது வெற்றி, தோல்வி, கவலைகள், இழப்புகள், அடைவுகள் என பல்வேறு விடயங்களால்தான் உருவாக்கப்பட்டுள்ளது. காலம் எமக்காக எக்காரணம் கொண்டும் மீண்டு வருவதுமில்லை, காத்திருப்பது மில்லை. முயற்சியை மூலதனமாக்கி தன்னம்பிக்கையை நண்பனாக்கி குறிக்கோளை நோக்கிச் செல்லுங்கள். இரவிற்குப்பின் விடியல் காண்பதுபோல் போராட்ட வாழ்க்கையின்பின் மனதிருப்தியையும் அடைவீர்கள். தளராத உள்ளத்தை தாங்கிடும் இவ்வாழ்க்கையில் எண்ணத்துணிவே ஏற்றம் பெறச் செய்யும். முடியாதது என்று இங்கு ஒன்றும் இல்லை. முடியும் என்று நம்பினால் தோல்வியும் இல்லை. படைத்தவனின் துணையுடன் மனஉறுதி எப்போதும் வாழ்வினை மலரச்செய்யும் மரணம் வரை.

முபீதா அமீன்
அக்கரைப்பற்று

## அன்பான வாசகர்களே!

**அழகு மற்றும் பேஷன் ஆரோக்கியம், கல்வி, மன நலம், சமையல், வீட்டு முகாமைத்துவம் , தொழில், சுய முன்னேற்றம், சமூக விழிப்புணர்வு, கலாசாரம், பொழுது போக்கு போன்ற உங்கள் ஆக்கங்களை மங்கையொளி பக்கத்துக்கு அனுப்புங்கள்.**

0775486616

# தென் கொரியாவில் இருந்து பௌத்த மற்றும் கத்தோலிக்க மதத் தலைவர்கள் இலங்கை வரவுள்ளனர்

**(ஏ. எஸ். எம். ஜாவித்)**

தென் கொரியாவில் இருந்து பௌத்த மற்றும் கத்தோலிக்க மதத் தலைவர்கள் உள்ளடங்கிய குழுவினர் உலகம் முழுவதும் மக்கள் மத்தியில் சமாதானயும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் இலங்கைக்கும் வரவுள்ளனர்.

இந்தவகையில் இலங்கை வரும் தூதுக்குழுவினர் இலங்கையில் உள்ள சகல சமயத்தினதும் முக்கிய உயர் பீட தலைவர் களையும் சந்தித்து கலந்துரையா டவுள்ளதுடன் மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்து



உதவிகளை செய்யவும் உள்ளனர். இந்த வகையில் இலங்கையின் தர்மசக்தி சர்வமத சமாதானக் குழு அவர்களின் வருகைக்கான ஏற்பாடுகளை செய்வது வருகின்றனர். தென் கொரிய சமாதானக் குழுவின் வருகை தொடர்பாக மத சமய விவகார பிரதியமைச்சர் முனீர் முளப்பரை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்தும் கலந்துரையாடியுள்ளனர். தர்மசக்தி அமைப்பின் இணைத் தலைவர்களான வணக்கத்துக்குரிய அஸ்சஜி தேரர், வண. அருட்தந்தை ஜெயராஜ், அமைப்பின் செயலாளர் அருட் சகோதரர் அனுர, சுவாமி தர்ஸக சர்மா, மௌலவி பிர்தௌஸ் , மௌலவி முஜீப் உள்ளிட்ட குழுவினர் பிரதி அமைச்சரை சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி பிரதேச செயலக காணிகளில் சகோதர இனத்தவர் குடியேற்றம்

## உடனடியாக நிறுத்துமாறு உதவித் தவிசாளர் நுபைல் கோரிக்கை

**(எஸ்.எம்.எம். முர்ஷித்)**

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை மற்றும் ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் நிருவாகத்தின் கீழ் வரும் காணிகளில் கிரான் பிரதேச செயலகம் எல்லை மீறி சகோதர இன மக்களை குடியேற்றம் செய்யும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டுமென கோறளைப் பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபையின் உதவித்தவிசாளர் ஏ.எச். நுபைல் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த கால பயங்கரவாத சூழ்நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவிலிருந்து 5 கிராம சேவகர் பிரிவுகளை தற்காலிமாக இணைப்புச்செய்த நிலையில் அதனை மீள வழங்க எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் எஞ்சியுள்ள முஸ்லிம்களின் பூர்வீகக்காணிகளையும் மீள்குடியேற்றம் என்ற போர்வையில் அபகரிக்க எடுக்கும் முயற்சியை ஏற்றுக்கொள்ள முடியாது.

குறித்த பிரதேசம் கோறளைப்பற்று மேற்கில் அமைந்துள்ளதென்பதை



கடந்த காலத்தில் பிரதேச செயலாளராக கடமை புரிந்த தவராசா அபிவிருத்திக்குழுக்கூட்டங்களில் ஊர்ஜிதப்படுத்தி இருந்ததையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

அத்துடன், இப்பிரதேசம் கோறளைப் பற்று மேற்கில் அமைந்துள்ளது என்ற காரணத்தினால் இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கான அரசு கொடுப்பனவுகளில் கூட இம்மக்கள் புறக்கணிப்புச்செய்யப்பட்டுள்ளார்கள். இவைகளெல்லாம் இப்பிரதேச கோறளைப்பற்று மேற்கில் உள்ள தென்பதற்கான தெளிவான சான்றுகளாகும்.

கோறளைப்பற்று மேற்கின் பெருவாரியான நிலப்பரப்பை ஏப்பமிடத்துடிக்கும் கிரான் பிரதேச செயலகத்தின் அநீதியான ஆபத்தான செயற்பாட்டுக்கு அரச அதிகாரிகளும் மாவட்ட நிருவாகமும் துணை போகாமல் நீதியை நிலை நாட்ட முன்வர வேண்டும்.

இது தொடர்பில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட அபிவிருத்திக்குழுத்தலைவர், பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவர் மற்றும் அதிகாரிகள் பக்கச்சார்பின்றி தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். அத்துடன், பிரதேசத்திலுள்ள பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும் பொது அமைப்புக்களும் பராமுகமாக இருந்து விடாமல் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# முதலமைச்சர் விஜய்க்கு சஜித் பிரேமதாச வாழ்த்து



தமிழகத்தின் புதிய அத்தியாய த்தைத் தொடங்கி யுள்ள தமிழக முதல்வர் விஜய்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

சமூக நீதி மற்றும் மதச்சார்பின்மையை அடித்தளமாகக் கொண்ட ஒரு புதிய யுகத்தைப் பற்றி நீங்கள் பேசினீர்கள் வெறுப்பு மற்றும் பழைய காயங்களின் மீது மட்டுமே கட்டப்பட்ட சமூகங்கள் இறுதியில் தனித்துவிடப்படும் என்பதையும் அதே நேரத்தில் நீதி மற்றும் சகவாழ்வின் மீது கட்டப்பட்ட சமூகங்களே மக்கள் உண்மையாக வாழ விரும்பும் எதிர்காலத்தை உருவாக்கும் என்பதையும் வரலாறு நமக்குக் காட்டியுள்ளது.

உலகம் ஏற்கனவே பிரிவினைகளால் நிறைந்துள்ளது. நம் பிராந்தியத்தில் உள்ள மக்கள் அனைவரும் மொழி, மதம் அல்லது அடையாளம் கடந்து உண்மையாக எதிர்பார்ப்பது சமூக முன்னேற்றம், நீதி மற்றும் நிலையான தன்மையையே ஆகும். நம்மைப் பிரிக்கும் விடயங்களை விட, நம்மிடையே உள்ள பொதுவான பண்புகளும் ஒற்றுமைகளும் மிக அதிகம். இந்தப் புதிய அத்தியாயம் முன்னேற்றத்தையும், கருணை யையும், கடந்த காலத்தில் மற்றவர்கள் இடைவெளியை உருவாக்கிய இடங்களில் புரிதலை ஏற்படுத்துவதற்கான ஆற்றலையும் கொண்டு வரும் என எதிர்பார்க்கின்றேன்.

# வரலாற்றின் குரல் சேர்மன் வ.நா.தம்பிராசா நூல் வெளியீடும், வீதி பெயர் பலகை திரை நீக்கமும்



**(ஏ.எச்.ஹஸ்பர்)**

வரலாற்றின் குரல் சேர்மன் வ.நா. தம்பிராசா நூல் வெளியீட்டு நிகழ்வும் வீதிப் பெயர் பலகைக் கான திரை நீக்கமும் திருகோணமலை திஃசாம்பல் தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் (09) இடம் பெற்றது.

நாமகன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் பிரதம அதிதியாக கலந்து



சிறப்பித்தார்.

இவ் நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு சட்டத்தரணி ந.சுரேஷ் குமார் தலைமை தாங்கினார். நூலின் முதற் பிரதிகளை பாராளுமன்ற உறுப்பினர் குகதாசன் வழங்கி வைத்தார்.

இதில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் தவிசாளர் வெள்ளைத் தம்பி சுரேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பெண்மணிகளுக்கான தொழில் சார் உதவிகள்



**(பாரா தாஹீர்)**

அகில இலங்கை வை எம் எம் ஏ தலைவர் சட்டத்தரணி அம்ஹர் ஷரீப் நிர்வாக குழுவின் ஆலோசனைக்கு இனங்க கேகாலை மாவட்டத்துக்குரிய விதவைகள் மற்றும் விவாகரத்துப் பெற்றவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் மாவனல்லையிலுள்ள வர்களுக்கு வழங்கப்பட்டது .

இந்த நிகழ்வில் கேகாலை மாவட்ட மாவனல்லை வை எம் எம் ஏ தலைவர் ஏ.கே.எம். பைஸல் ஆசிரியர் மற்றும் கேகாலை மாவட்ட முன்னாள் பணிப்பாளர் கே.ஏ.லுக்மான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர் .

# குருணாகல் பிரதிமேயர் அஸாருடீன் கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநீக்கம் :

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்



குருணாகல் மாநகர சபையின் ஒப்பந்த செயல்முறை தொடர்பான விவகாரங்களுடன் தொடர்புடைய செயல்முறையுடன் தொடர்புபட்டு இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட குருணாகல் மாநகர சபையின் பிரதி மேயர் அஸாருடீன் மெய்னுடீனின் கட்சி உறுப்புரிமை உடனுக்குக்கு அமுலுக்குவரும் வகையில் இடைநீக்கம் செய்யப்படுவதாக கட்சியின் சட்டவிவகாரங்களுக்கான பணிப்பாளர் சட்டத்தரணி றுஷ்டி ஹபீப் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

“அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஊழலுக்கும் சட்டத்தின் ஆட்சியை பாதிக்கும் எந்தவொரு நடத்தைக்கும் எதிராக உறுதியான மற்றும் சமரசமற்ற கொள்கையைக் கடைப் பிடிக்கிறது. பொது நம்பிக்கையை சீர்குலைக்கும் அல்லது நாம் நிலைநிறுத்தும் நேர்மை மற்றும் பொறுப்புணர்வு கொள்கைகளுக்கு அவமரியாதை ஏற்படுத்தும் எந்தச் செயலையும் கட்சி அனுமதிப்ப தில்லை. நடைபெற்று வரும் விசாரணைகள் மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெறக்கூடிய சட்ட நடவடிக்கைகள் நிறைவடை யும் வரை இந்த இடைநீக்கம் அமுலில் இருக்கும்.

சட்டம் எந்தத் தலையீடும் இன்றி தனது நடவடிக்கைகளை முன்னெடுக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பதில் கட்சி நம்பிக்கை கொள்கிறது.

மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கும் என எதிர்பார்க்கிறது.

குறிப்பிடப்பட்ட நபருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுகள் முற்றிலும் அவருடைய தனிப்பட்ட செயல்களாகும் அவை கட்சியின் கொள்கைகள், விழுமியங்கள் அல்லது அதிகாரப் பூர்வ நிலைப்பாட்டை பிரதிபலிப்பவை அல்ல என்பதை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வலியுறுத்துகிறது.

இந்த விவகாரத்தின் முன்னேற்றங் களை கட்சி தொடர்ந்து கவனித்து வருவதுடன், தனது அரசியலமைப் பும் ஒழுக்காற்று நடைமுறைகளும் ஏற்படுத்திய விதிமுறைகளுக்கு அமைவாக தேவையான மேலதிக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.” எனவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் இலங்கை நிருவாக சேவை அதிகாரிகளுக்கான ஒன்பதாவது திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் வெற்றிகரமாக நிறைவு





(ஏ.எச்.ஹஸ்பர்)

இந்தியாவின் தேசிய நல்லாட்சிக்கான மையத்தில் இலங்கை நிருவாக சேவை அதிகாரிகள் 40 பேருக்காக நடத்தப்பட்ட ஒன்பதாவது திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் 2026 மே 08 ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவடைந்தது.

‘அனர்த்த முகாமைத்துவம்’ என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இரு வாரங்கள் நடைபெற்ற இத் திட்டம், முந்தைய பயிற்சி குழுக்களிட மிருந்து கிடைத்த சாதகமான பின்னூட்டங்களையும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் முன்வைத்திருந்த விசேட கோரிக்கையையும் அடிப்படை யாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

இத்திட்டம், 2024 ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க இந்தியாவிற்கு மேற் கொண்ட அரச உத்தியோகபூர்வ விஜயத்தின் போது கையெழுத்திடப் பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் இரண்டாவது ஆண்டுக் கட்ட செயல்பாட்டின் தொடக்கத்தை குறிக்கிறது.

இந்த கூட்டாண்மை, ஐந்து ஆண்டுகளில் 1500 இலங்கை சிவில் சேவை அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் முதல் ஆண்டான 2025-26 காலப்பகுதியில் 321 அதிகாரிகள் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.

இப்பயிற்சி திட்டத்தின் கீழ் அனர்த்த முகாமைத்துவம், அனர்த்தத்திற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், பாதிப்பு குறைப்புத் திட்டங்கள், தேசிய பாதுகாப்பு மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் உள்ளிட்ட முக்கிய துறைகள் தொடர்பான பல அமர்வுகள் இடம்பெற்றன.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக தேசிய அனர்த்த முகாமைத்துவ ஆணையம், தேசிய அனர்த்த பதிலளிப்பு படை, மாநில அனர்த்த பதிலளிப்பு படை, பிரதான்மந்திரி சங்க்ரஹாலயா உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களுக்கு களப்பயணங்களும் மேற்கொள்ளப் பட்டன. இதன் மூலம் இந்தியாவின் அனர்த்த முகாமைத்துவ அமைப்புகள் மற்றும் நல்லாட்சி கட்டமைப்புகள் தொடர்பான நடைமுறை அனுபவங்களைப் பங்கேற்பாளர்கள் பெற்றனர்.

இலங்கையுடன் இந்தியா மேற் கொள்ளும் அபிவிருத்தி ஒத்துழைப்பில் திறன் மேம்பாடு முக்கிய தூணாக தொடர்கிறது. 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் இலங்கைக்கு மேற்கொண்ட அரச உத்தியோகபூர்வ விஜயத்தின் போது ஆண்டுதோறும் மேலதிகமாக 700 பயிற்சி வாய்ப்புகள் அறிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து, தற்போது இந்தியா ஆண்டுதோறும் 1000 இலங்கையர்களின் திறன் மேம் பாட்டிற்கு ஆதரவு வழங்கி வருகிறது.

இந்த மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு, இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவடைந்துவரும் இருதரப்பு கூட்டாண்மையை பிரதிபலிக்கிறது.

## காரைதீவு மற்றும் மாளிகைக்காடு மாணவர்களின் இன நல்லுறவுக்கான ஒன்றுகூடல்





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இனங்களுக்கு இடையிலான சகிப்புத் தன்மையையும், சமூக ஒற்றுமையையும் கட்டியெழுப்பும் நோக்கில், காரைதீவு மற்றும் மாளிகைக்காடு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இரு பாடசாலை மாணவர்கள் இணைந்து ஒரு விசேட நல்லுறவுச் சந்திப்பை நடத்தினர்.

காரைதீவு கண்ணகி இந்து வித்தியாலயம் மற்றும் மாளிகைக்காடு அல்ஹுசைன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் தரம் 4 மாணவர்கள் இந்த உன்னதமான நிகழ்வில் ஒன்றாகச் சங்கமித்தனர்.

தரம் 4 மாணவர்கள் மிக உற்சாகத்துடன் ஒருவரையொருவர் கைலாகு கொடுத்து வரவேற்றுக் கொண்டனர். மொழி மற்றும் மத அடையாளங்களைக் கடந்து, ‘சிறுவர்கள் அனைவரும் ஒன்றே’ என்ற உயரிய பண்பை இந்த நிகழ்வு பறைசாற்றியது. இரு பாடசாலை மாணவர்களும் தத்தமது கலாசார விழுமியங்கள் மற்றும் கலை நிகழ்வுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு குறித்து கருத்துத் தெரிவித்த ஆசிரியர்கள், “இளம் வயதிலேயே இவ்வாறான சமூக ஒருங்கிணைப்பு நிகழ்வுகள் நடைபெறுவது, எதிர்காலத்தில் ஒரு பலமான மற்றும் அமைதியான சமூகத்தைக் கட்டியெழுப்ப உதவும். காரைதீவு மற்றும் மாளிகைக்காடு மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட இந்தப் பிணைப்பு ஒரு முன்மாதிரியான செயலாகும்” எனத் தெரிவித்தனர்.

நிகழ்வின் இறுதியில், மாணவர்கள் ஒருவருக்கொருவர் நினைவுப் பரிசில்களைப் பகிர்ந்து கொண்டதுடன், இந்த நட்புறவு தொடர வேண்டும் என்ற உறுதிமொழியுடன் விடை பெற்றனர். இந்தச் சங்கமமானது இப்பகுதியில் இன நல்லுறவை வலுப்படுத்துவதில் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

## கிண்ணியா தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக சௌபான் கடமையேற்பு



(எம்.ஏ.முகமட்)

கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த வைத்தியர் எம்.ரீ.எம்.சௌபான் கிண்ணியா தள வைத்தியசாலை யின் புதிய வைத்திய அத்தியட்ச கராக (11) பொறுப்பேற்றுள்ளார்.

இவர் கிண்ணியா மண்ணிலிருந்து மருத்துவ நிர்வாகத்தில் முதுகலை பயிற்சித் திட்டத்தை முதன்முதலாகப் பூர்த்தி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊடகவியலாளரும் ஆசிரியருமான பி.எம்.அன்வர் காலமானார்



(உக்குவலை ஜெலீல்)

கலேவெல பிரதேச ஊடகவிய லாளரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான பி.எம். அன்வர் சுகயீனமுற்றிருந்த நிலையில் கடந்த 9ஆம் திகதி சனிக் கிழமையன்று தனது 87 வது வயதில் காலமானார்.

மாத்தளை மாவட்ட இளம் கலைஞர்கள் சங்கத் தலைவர் தேவ/ஹவ நிஜாமுதீன் கவிஞர் ரசீத் எம் ரியாழ் ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் எம். முனாஸ் ஆகியோர் இவரது மறைவு குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ள துடன் இவரது குடும்பத்தினரு க்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்க ளைத் தெரிவித்துள்ளனர்.

பிரதேச ஸ்ரீ.ல.மு.கா அபிமானியான பி.எம். அன்வர் நீண்டகாலமாக பிரதேச ஊடகவியலாளராகப் பணியாற்றி வந்தாலும், மாணவர்களது கல்வித்துறை வளர்ச்சியிலும் அக்கறை செலுத்தியவர் கலேவெல தேவஹுவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தேவஹுவ நஜிமுதீனின் ஒருங்கிணைப்பில் முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாட்டில் 2023ல் நடாத்தப்பட்ட பரிசளிப்பு விழாவில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட சமூக ஆர்வலர்கள் ஆறு பேரில் இவரும் ஒருவராவார்.

கலேவெல நமடகஹவத்தையில் வசித்து வந்த இவர் இவரது மனைவியும் சில மாதங்களுக்கு முன் காலமான இவர் 7 பிள்ளைகளின் தந்தையாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




பாரா தாஹிர்
சிரேஷ்ட ஊடகவியலாளர்



# என் அம்மா

என் அம்மா அழகானவர் அன்பானர். என்னை மிகவும் நன்றாக கவனிப்பார். பாடசாலை பாடங்களை நன்றாக சொல்லித் தருவார். பெரியார் வரலாற்றுக் கதைகளையும் சொல்லித் தருவார். எனக்கு அம்மாவை நன்றாகப் பிடிக்கும்..

அஹமட் ரஸா.
தரம் 3ஏ
ஏறாவூர்

# சிறுவர் சித்திரங்கள்



அம்மார் யாஸிர்
தரம் 6
களு அல்பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் ஆண்கள் பாடசாலை பேருவளை.



M.R.M.Rimas
Grade 8
Danagama.M.V



M.M.M.Mihran
UKG
Ideal children's house,
Mawanella.

# தாயே



பத்து திங்கள் சுமந்து பாசத்துடன்
பெற்றெடுத்த என் அன்புத் தாயே

துயரென்றால் துடித்திடுவாய்
நோயென்றால் நொந்தெழுவாய்

ஓரிரண்டு வயது வரை இரத்தத்தை
பாலாக்கி

பண்புடனும் அன்புடனும் சேர்த்தூட்டினாய்

தாய் மடியே முதற் பள்ளியாய், ஆசானாய் நீ திகழ்ந்தாய்

அன்பையும், உடன் அறிவையும்
சேர்த்து இன்று வரை நீ
தந்தாய்.

தாயே....

மீண்டும்
உன் மடியில்
மலமைலயாய்
தலைசாய்க்க
ஆசைப்படுகிறேன்..

Shafiya Nihmathulla
Grade 11x
Zahira National school
Mawanella.



# A Day at the Circus

Today, my father had planned to go somewhere special, and he chose the circus.
My family and I were really happy, and we quickly got into the car to go to the circus. We all got in, fastened our seatbelts, and started our journey.
After some traffic, we finally arrived at the circus. We bought our tickets and went to our seats with popcorn buckets in our hands.
We saw clowns doing funny acts that made us laugh, cheetahs jumping through fiery rings that made us gasp, and acrobats performing so many amazing stunts.
At the end, everyone cheered and clapped for the ringmaster and all the performers in the show.
After that, we all left feeling really happy. And that is how I felt on my day at the circus.



F.A Aneeq Ahmed.
Grade 07-E
Baduriya
central college.
Mawanella

**படைப்பாற்றலை ஊக்குவித்து, பொது அறிவை வளர்த்து, பொழுது போக்குடன் கல்வியறிவை வளர்த்து, சிறாரிடத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் “உதய பூங்கா “ எனும் சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பகுதியில் உங்கள் ஆக்கங்களை கட்டுரையாக, கவிதைகளாக, துணுக்குகளாக, விடுகதைகளாக, சிறுகதை களாக, பிறந்தநாள் வாழ்த்தாக, சித்திரங்களாக, பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளாக இவ் வட்சப் இலக்கத்திற்கு**

**0775323239**
**அனுப்பலாம்.**



மாவனல்லை Al Hamza International பாடசாலையில் கல்வி கற்கும் ஆ. ஐ. அம்ராஸ் எனது நகரத்தின் கனவு பற்றிய ஆளுமை விருத்தியை வெளிகாட்டியுள்ளார்




வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த ஆறு வயதுச் சிறுவன் மஹ்தி
சுவர் ஓரத்தில் ஒன்றிப் படுத்திருந்த ஓர் உடும்பைக் கண்டான் .
எத்தனையோ தடவைகள் படத்தில் கண்டு இருந்தாலும் முதன்முறையாக நேரடியாகப் பார்த்ததால் அவனுக்குச் சிறிது பயம் ஏற்பட்டது.
தூரத்தில் இருந்து சிறு கற்களால் உடும்பை நோக்கி எறிந்தான்.
சிறிது அசைந்து விட்டு மீண்டும் படுத்தது.
உடனே வீட்டுக்குள் ஓடிச் சென்று தாயை எழுப்பி கூட்டி வந்து உறுப்பைக் காண்பித்தான்.
தாயார் அருகாமையில் சென்று பார்த்தார்.
பாவம் அந்த உடும்போ காலில் ஏற்பட்ட காயத்தின் வலியால் ஊர்ந்து செல்ல முடியாமல் படுத்திருந்தது.
மஹ்தியும் சற்று பயத்தை ஓரங்கட்டி வைத்து விட்டு அருகாமையில் நின்று பார்த்தான்.
உடும்பினது நிலைமையைப் பார்த்தவுடன் அவனுக்குக் கவலை வந்தது.
அதன் காயத்துக்கு மருந்து இடுமாறு தாயாரிடம் வேண்டினான்.
தாயாரும் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார்.
திடீரென மிருக வைத்தியரின் நினைவு வரவே தொலைபேசியில் அழைப்பு விடுத்தார்.
விடயத்தை அறிந்து கொண்ட மிருக வைத்தியரும் அவசரமாக அங்கே வந்தார்.
உடும்பின் காயத்துக்கு மருந்திட்டார்.
சிறிது நேரத்தில் உடும்பு அசைந்து அசைந்து பார்த்தது.
ஊர்ந்து செல்ல எத்தனித்தது.
அப்போது வீட்டுக்குள் சென்ற மஹ்தி உணவுத் தட்டத்தோடு வந்தான்.
உடும்புக்கு உண்ணக் கொடுத்தான்.
உடும்பு சாப்பிட்டது.
தண்ணீரும் வைத்தான்.
உடும்பு குடித்தது.
உடும்பு நன்றி சொல்லும் விதத்தில் தலையை மேலும் கீழும் ஆட்டியது.
பின்னர் அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென்றது.
இந்த நிகழ்வை பாதையால் சென்று கொண்டிருந்த அவனது பாடசாலை அதிபர் நின்று கண்காணித்து க் கொண்டிருந்தார்.
அவர் அடுத்தநாள் மஹ்தியின் வகுப்பறைக்குச் சென்று மாணவர்களின் முன்னிலையில் மஹ்தியைப் பாராட்டினார்.
சிறு வயதிலேயே உயிரிடத்தில் அன்பு கொண்டு உதவிய சிறுவனை நாமும் பாராட்டுவோம்.
நன்றி

A. அயான்
தரம் 7
பொ/அல அஸ்ஹர் மகா வித்தியாலயம்
கல்லளை பொலன்னறுவை



அரபாத் பஹுர்தீன்



# இலங்கை ஒருநாள் மற்றும் ரி20 அணிகளின் தலைவராக குசல் மெண்டிஸ்?

வரவிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணத்திலிருந்து இலங்கை கிரிக்கெடின் ஒருநாள் மற்றும் ரி20 அணிகளின் தலைவராக விக்கெட் காப்பு வலது கை துடுப்பாட்ட வீரரான குசல் மெண்டிஸ் நியமிக்கப் படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.
தற்போதைய இலங்கை கிரிக்கெட் அணியின் ஓட்ட இயந்திரம் என வர்ணிக்கப்படும் 31 வயதான விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான குசல் மெண்டிஸ், ஒருநாள் அணித் தலைவராக உள்ள சரித் அசலங்க மற்றும் ரி20 அணித் தலைவராக உள்ள தசுன் சானக்க ஆகியோருக்கு பதிலாக பொறுப்பேற்க உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.
பரபரப்பான சர்வதேச அட்டவணையை முன்னிட்டு, வெள்ளைப்பந்து அணிகளில் நிலைத்தன்மையும் தெளிவான வழிநடத்தலும் உருவாக்கும் நோக்கில் இந்த மாற்றம் மேற்கொள்ளப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.
இதற்கிடையில், இலங்கை டெஸ்ட் அணியின் தலைவராக தனஞ்சய டி சில்வா தொடர்ந்து செயல்படுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.
மேலும் கடந்த வாரம் இடம்பெற்ற முடிந்த பாகிஸ்தான் சுப்பன் லீக் ரி20 போட்டித் தொடரில் பாபர் அசாம் தலைமையிலான புஷாவர் சல்மி அணியை பிரதிநிதித்துவம் செய்து ஆடிய குசல் மெண்டிஸ் 500 ஓட்டங்களைக்கும் அதிகமான ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு வீரர்கள் பதிவு ஆரம்பம்




லங்கா பிரீமியர் லீக் தொடருக்கான நடப்பு ஆண்டிற்கான லங்கா பிரீமியர் லீக் ரி20 (LPL) தொடருக்கான வெளிநாட்டு வீரர்களின் பதிவு கடந்த வெள்ளிக்கிழமை (08) ஆரம்பமானது.
இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிர்வரும் 18ஆம் திகதி வரை இதற்காகப் பதிவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான www.srilankacricket.lk ஊடாக இந்த இணையவழிப் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.
லங்கா பிரீமியர் லீக் தொடரை நாட்டின் நான்கு பிரதான மைதானங்களில் நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை திட்டமிடப்பட்டுள்ளது.
அதன்படி, கொழும்பு எஸ்.எஸ்.சி (SSC), ஆர். பிரேமதாச மைதானம், கண்டி பல்லேகல மற்றும் தம்புள்ளை ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.
இந்தத் தொடர் எதிர்வரும் ஜுலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# லாலிகா உதைப்பந்தாட்ட தொடர் ரியல் மாட்ரிட்டை வீழ்த்தி சம்பியன் மகுடம் சூடியது பார்சிலோனா



உலகின் புகழ்பெற்ற கழகங்களுக்கு இடையிலான உதைப்பந்தாட்டப் போட்டிகளின் முதன்மைப் போட்டியான எல் கிளாசிகோ போட்டியில் ரியல் மெட்ரிட் கழகத்தை 2:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பார்சிலோனா கழகம் நடப்பு ஆண்டின் சம்பியன் மகுடத்தை தனதாக்கி அசத்தியது.
உலகப் புகழ் பெற்ற உதைப்பந்தாட்ட கழகங்களுக்கு இடையிலான போட்டித் தொடரான ஸ்பெய்னின் லாலிகா தொடரின் போட்டிகள் ஸ்பெய்னின் பல மைதானங்களில் இடம்பெற்று வருகின்றன. அதற்கமைய 35 ஆவது வாரத்திற்கான லீக் ஆட்டத்தில் பரம எதிரிகளான பார்சிலோனா மற்றும் ரியல் மெட்ரிட் ஆகிய கழகங்கள் மோதிக் கொண்ட எல் கிளாசிகோ என வர்ணிக்க ப்படும் ஆட்டம் இலங்கை நேரப்படி திங்கள்கிழமை (11) அதிகாலை 12.30 மணிக்கு பார்சிலோனாவின் கேம் நோவு மைதானத்தில் இடம்பெற்றது.
இப் போட்டியில் இரு கழகங்களின் நட்சத்திர வீரர்கள் பலர் பங்கேற்றிருக்க வில்லை. குறிப்பாக பார்சிலோனா அணியில் லமினே யமால் , ரபின்ஹா மற்றும் ஜ/லேஸ் குண்டே ஆகியோர் ஆரம்ப அணியில் இடம்பெறவில்லை.
அதேபோல் ரியல் மாட்ரிட் அணியில் எடர் மிலிடானோ, டெனி கர்வெஜல், பெர்லன்ட் மெடி, அர்டா குலர் மற்றும் ரொட்ரிகோ ஆகியோரோடு எம்பாப்பேயும் இடம்பெற்றிருக்கவில்லை.
விறுவிறுப்பிற்கு பஞ்சமில்லாத போட்டி தொடங்கி ஒன்பதாவது நிமிடத்தில் மார-கஸ் ரஸ்போர்ட் அந்த ரியல் மெட்ரிட் இன் வெற்றி நம்பிக்கையை சிதைத்தார்.
பெனால்டி பகுதிக்கு வெளியே தவறு செய்ததையடுத்து கிடைத்த ஃப்ரீ கிக்கினை ராஷ்போர்ட் அசத்தலாக வளைத்து, ரியல் மெட்ரிட் கோல் காப்பாளருக்கு எட்ட முடியாத வகையில் கம்பத்தின் மேல் இடது மூலையில் அடித்தார். இதனால் பார்சிலோனா 1:0 என ஆரம்ப முன்னிலை பெற்றது.
அதன் ஒன்பது நிமிடங்கள் கழித்து பார்சிலோனா இரண்டாவது கோலைப் பெற்றது. பெர்மின் லூபிஸ் அனுப்பிய குறுக்குப் பந்தை டெனி ஒல்மோ புத்திசாலித்தனமான பின்கால் தொடுதலால் பெரன் டோரஸ் வசம் அனுப்பினார். டோரஸ் அதனை சக்திவாய்ந்த அடியாக கம்பத்தின் மேல் மூலையில் அடித்து கோலாக்கினார். இதனால் முதல் பாதியில் பார்சிலோனா 2:0 என முன்னிலை பெற்றது.
பின்னர் தொடர்ந்த 2ஆவது பாதி ஆட்டத்தில் இரு கழகங்களும் கோலுக்கான முயற்சியில் வெற்றி காணவில்லை. இதனால் முதல் பாதி கோல்களுடன் பார்சிலோனா கழகம் 2:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் பரம எதிரியான ரியல் மாட்ரிட் கழகத்தை வீழ்த்தி வெற்றி கொண்டது. இந்த வெற்றியின் மூலம் நடப்பு ஆண்டின் லாலிகா உதைப்பந்தாட்டத் தொடரில் இன்னும் இரு போட்டிகள் மீதமிருக்க 30 வெற்றிகள், 4 தோல்விகள் மற்றும் ஒரு சமநிலை அடங்களாக 91 புள்ளிகளைப் பெற்று சம்பியன் மகுடத்தை தனதாக்கி அசத்தியது பார்சிலோனா கழகம். மேலும் இச் சம்பியன் பட்டம் லாலிகாவில் பார்சிலோனா பெறும் 29ஆவது என்பது குறிப்பிடத்தக்கது.
மேலும் இத் புள்ளிப் பட்டியலில் ரியல் மாட்ரிட் கழகம் 24 வெற்றிகளுடன் 77 புள்ளிகளைப் பெற்று 2ஆவது இடத்திலும், வெலாரியல் 21 வெற்றிகளுடன் 69 புள்ளிகளைப் பெற்று 3ஆவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.